உ

ஓம் பரப்பிரஹ்மணே நம

ஞானவியவகாரம்.

இவை

திருவாரூருக்கடுத்த கலவைக்குடியிலிருக்கும்,

பண்டிதர் ஸ்ரீமான்

T. S. நாராயணசாமி ஜோசியர்

அவர்களாலியற்றப்பட்டு

K. பஞ்சாபிகேசய்யரவர்கள்

வேண்டுகோளின்படி

தஞ்சை

"ஸ்ரீ வித்தியாவிநோதினி அச்சுக்கூடத்தில்"
பதிப்பிக்கப்பட்டது.

1908.

விலை அணா 8

காப்பிகள் 1500.

Copy-right-registered.

அறிவிப்பு.

இப்புத்தகம் வேண்டியவர்கள் அடியிற்கண்ட இடங்களில் நேரிலாவது வி. பி. மூலமாயாவது பெற்றுக்கொள்ளலாம். வி பி. சார்ஜ பிரத்தியேகம். ஒரே தடவையில் 10 புத்தகம் வாங்குவோர்களுக்கு ஒரு புத்தகம் இனாமாகக்கொடுக்கப்படும்.

Messrs. V. கோவிந்தன் & பிரதாஸ், வடக்குவீதி, தஞ்சாவூர்.

பிரம்மஸ்ரீ T. S. நாராயணசாமி ஜோசியபண்டிதர், ராஜகோபால சுவாமி கோவில் வீதி தஞ்சாவூர்.

M. R. Ry. K. பஞ்சாபிகேசய்யர், கிளார்க் சத்திரம தாசில்தாரவர்களாபீசு, தஞ்சாவூர்.

,, V. கிரஷ்ணய்யா, கலவிக்குடி, அடியக்கமங்கலம போஸ்ட் S. I. R.

,, K. S. வெங்கிடராமய்யரவாகள், முதலாவது கிரேட் பிளீடர் நாகபட்டணம.

,, ராமலிங்கம்பிள்ளை, ஸ்கூல்மாஸடர் மேட்டுப்பாளையம, திருத்துரைப்பூண்டி தாலூகா.

பிரம்மஸ்ரீ குருச்சி ராமானுஜாசாரியார், ஷை தாலூக்கா விளக்குடி.

M. R. Ry. துரைசாமி ஐயரவாகள், உமையாள்புரம் ஸ்கூல் மானேஜா.

T. S. நாராயணசாமி ஜோசியர் அவர்கள்,

புக் புரோப்ரைட்டர்,

கல்விக்குடி.

பரப்பிரம்மஸ்துதி.

உலகமுதல் பொருளை யுமபர்க்குணா வரிதாம பொருளை
ஓதிய வேதாகமத்தினுச்சியி னுடைய பொருளை
பலகலையின பொருள் முடிவின முடிவான பொருளைப
பற்றறப்பற்றிய பெரியோர் பரவியவான பொருளை
அலைதிவலை நுரைகடலி னுதித்தொடுங்கு மாபோ
லகிலாண்ட முதித்தொடுங்கு மதின மூலப்பொருளை
இலகிய சற்குரு வாகியானுரும பொருளை
யெந்தாம பரமபொருளையாம வணங்குதுமே.

ஞானவியவகாரமென்னும், இந்த புஸ்தகமானது,

பரமஹம்ஸ ராயவதரித்த,

ஸ்ரீ சங்கராசாரியரவாகள் பரமபரையான வித்தியாரண்ணிய ஸ்வாமிகளால செய்யப்பட்ட பஞ்சதசி என்னும வேதாந்த வாக்கியார்த்தமான ஸமஸ்கிருத பாஷையிலிருந்து எளிதில நன்றாய மனதில பதியுமாறு வியவகாரமாயும் - யுக்தியாயும - சாதுரியமாயும யாரும் அங்கீகரித்து ஆனந்திக்குமாறு தெளிவான தமிழ் நடையில விளக்கிக்காட்டி, ஜனமமெடுத்த மானிடா ஆண-பெண இருபாலாக்கும படிப்பினையாயிருக்கும பொருட்டு அமைக்கப்பட்டிருக்கிறது.

इत्थंप्रवक्तार. ।

ब्रह्मश्री ।

यज्ञस्वामि शास्त्रिण: ॥

तत्वात्मा ध्यात्मिकानि प्रविशद्मलशा ।
ज्ञातुमिछंति येयेशास्त्रार्थ ज्ञानहीना ।
सततमपित्रथालौकिका सत्तचित्ता तेमि पश्यतु ।
सर्वे सकुतुकमुचितन्यायवाक्य प्रबध ।
श्रीमन्नारायणाख्यं द्रविडकविकृतं धीविनोदैकहेतु ॥

உ

ஓம் பரப்பிரஹ்மணே நம:

ஞான வியவகாரம்.

அண்டபிண்ட பிரமாண்ட அகண்டமண்டலாதிபதியாகிய பரிவிராட்டு கோட்டாரவர்கள் சமுகத்திற்கு.

பிரவிருத்தி வருஷத்திய நிவர்த்தி நம்பர்.

வாதி.

நிரஞ்சனக்கோட்டை ஜில்லா, சிரமங்கலந்தாலூகா, நவத்துவாரமங்கலம் மாகாணம், கண்ணனூரிலிருக்கும், கருவூர்ஸ்வயம் பிரகாசமுதலியார் குமாரர், ஜாதி சுக்கிலம், மதம் சம்மதம், தொழில் பந்தம், ஏகவயதுள்ள ஆத்மனாத பண்டிதர்.

ஷை தரப்பு வக்கீல்கள்.

பக்தினாத பண்டிதர்	1.
வைராக்கிய ராயர்	2.
விவேகமூர்த்தி ஐயர்	3.

பிரதிவாதிகள்.

ஆவரணசக்திபுரம் ஜில்லா, அவித்தியாமங்கலந் தாலூகா, அவிவேகபுரம் மாகாணம், சிதாபாசக்குடி கிராமத்திலிருக்கும், ஜாதி பலபல, மதம் பலவிதம், தொழில் விதண்டை.

இராகருவுத்தன்	1.
துவேஷ மூர்த்திராவ்	2.
காமா நாயக்கன்	3.
குரோதப்பையா	4.
லோபநாத பிள்ளை	5.
மோகனாத பண்டிதர்	6.
மதத்த நாயுடு	7.
மாச்சரிய முதலியார்	8.
ஈருஷை செட்டியார்	9.
அஸூயை ஐயங்கார்	10.

டம்ப ராஜா	11.
தர்ப்பப பத்தன	12.
அகங்காரச்சாம்பான்	13.

ஷை தரப்பு வக்கீல்கள.

மண்ணுசை உடையார்	1.
பெணணுசை நயினா	2.
பொன்னுசை முதலியார்	3.

செக்ஷன்.

சாமவேதச்சாந்தோக்கிய உபநிஷத்தினபடி வாதி பிராது.

எனக்குப் பூர்வீகசசொநதமாகிய பரமபத க்ஷேத்திரத்தைச சார்ந்த அறிவானநதபுரம் ஏகபோக கிராமங்களாகிய, மூலக குளம் 1. ஸ்வாதிஷ்டானபுரம 2. மணி பூரகமங்கலம 3. அநாகதப் பட்டி 4. விசுத்தி நல்லூா 5. ஆக்ஞைக்குடி 6. இநத கிராமங்களை சாகுபடி செய்யுங்காலஙகளிலும, தண்ணீர பாயுங்காலங்களிலும, மகசூல் காலஙகளிலும, ஷை பிரதிவாதிகள என்னுடைய சித்த மேழியை ஒடித்தும, ஞானப்பயிரில் இன்பதுன்பமான மாடுகளை விடடழிததும, வைராககிய கண்ணியைததூாநதும், கருணை ஏரி யின் பாயமடைகளைக் கட்டியும, கண்வாயகளை வெட்டியும, பயி ரின தததுவ பலனகளை களைபரிகக வொட்டாமல செய்வதுந் தவிர, குததகை ஏற்பட்டிருககிற 21,600 கலம் மகசூல நெலலை தடவை ஒன்றுக்கு நாலு நாலு கலமாகச சூறையிட்டும, எனனு டையஸவானந்த சுகானுபவததில இருககவொட்டாமல தொந திரவு செயதுவருகிறார்கள்.

ஆகையால் கோாட்டாரவாகள தயவுசெய்து என்னுடைய சாக்ஷிகளைவிசாரிததும, எதிரிகளின கட்டுப்பாடான சாக்ஷிகளின் வாககுமூலஙகளை நிராகரிததும, வாதிபக்கம தீரப்புசெய்யவேணு மாய் பிராாததிககிறா. பிராதின பொறுமானம தொகை. O இட்டா.

வாதி தரப்பு சாக்ஷிகள

ஸாத்விகபுரம விவேகதீக்ஷதர்	1.
வாயுபுரம் மாருதாசாரி	2.

மணிமங்கலம் வீக்ஷிண்ணிய கடாக்ஷராயர் 3.
ஸப்தாதிபுரம் சாந்தலிங்கசாஸ்திரி 4.
கர்மேந்திரியநல்லூர் வாக்குனைத பண்டிதர் 5.
மேலையூர் அவ்யக்தனுதய்யா 6.
ப்ராசீனபுரம புராதனஸ்ரௌதி 7.
சத்துவக்குடி ஸாஜனப்பையர் 8.

பிரதிவாதி தரப்பு சாக்ஷிகள்.

கோசமாபுரம அநாத்மநாதசெட்டி 1.
ஷையூர் அவிவேகப்பத்தன் 2.
பொய்யூர் வலலாளருவுததன 3.
பாழூர அபாண்டமுதலியார 4.
அவிதநியாமங்கலம் சிதாபாசய்யர் 5.
நிஷேதமங்கலம் குடிமயக்கக்கோனுன் 6.
கீழையூர அபானசேர்வைகாரன் 7.
சூதபுரம சோரனுத நாவிதன் 8.

பூர்வோதயமாகி வநதமேதியில் அந்தக்கர்ணநல்லூரில் வியாஜ்யமூலம் உண்டாகியிருக்கிறது.

இநத நம்பரில் ஷை நிலம சிதாபாசனென்பவன் தான்பாத்தியப்பட்டவனென்றும, தன்னையும் பிரதிவாதியாகச் சேர்த்துக்கொள்ளவேணுமெனறும, மனுககொடுததிருககிறபடியால், ஷையானை 14-வது சப்ளிமெண்டு பிரதிவாதியாகச சேர்க்கப்பட்டிருக்கிறது.

இதுகிறக அவியெனற பெயரையுடைய மாயையானவள் ஜகத்முழுமையும் தன்னுடையதென்றும், தனக்கே முழுபாத்தியமென்றும, ஷை பிரதிவாதிகளுககு யாதொரு பாத்தியமில்லையென்றும், பாத்தியமனுக்கொடுத்து தன்னுடைய பாத்தியத்தை ஸ்தாபிக்கவேணுமென்று விவகரிக்கிறுளாகையால் அவளை முதல் பாததிய மனுதாரியாகச சேர்க்கப்பட்டிருக்கிறது.

வாதியின்வாக்குமூலம்.

ஷை தரப்பு வக்கீல்களால் விசாரிக்கப்படுகிறது.

கேழ்வி.—நீர்யார்?

விடை.—நான் ஜீவாத்மாவாகியஜீவன்.

கே.—நீர் எந்தவூர்?

வி.—நானிருப்பது முப்பாழும் பாழாம் முடிவிலொரு சூனியமாம். அப்பாழும் பாழுமென்று சொல்வது அதானது பரமபத க்ஷேத்திரமென்று சொல்வது.

கே.—உம்முடைய தகப்பன் பெயரென்ன?

வி.—அது எனக்குத் தெரியாது.

கே.—உமக்கு வயதென்ன?

வி.—அதுவும் எனக்குத் தெரியாது.

கே.—உமக்கு தொழில் யாது?

வி.—நான் பாசாஅடவியில் ஈடுபட்டு அக்ஞானப் பயிர் அபிவிர்த்தியடையுமாறு பாழும் நிலததில் சாகுபடிசெய்து வருகிறேன்.

கே.—ஷை பிராதில் கண்டவைகள் உண்மைதானா?

வி.—உண்மைதான்.

கே.—உறுதியாய்சசொல்லும்?

வி.—உறுதியாகவே சொல்லுகிறேன்.

பிரதிவாதி வக்கீல் கிராஸ்.

கே.—உம்முடைய தாய் தகப்பன் பெயர் தெரியாதென்று சொன்னீரே அது எதனால்?

வி.—எனக்கு அன்னை எததனை எத்தனை அன்னையோ, அப்பனெததனை எததனை அப்பனோ, பிள்ளை எத்தனை எத்தனை பிள்ளையோ, பெண்டீர் எததனை எத்தனை பெண்டீரோ, முன்னை எத்தனை எத்தனை ஜனமமோ, மூடனானதால் தெரியாதென்று சொன்னேன்.

கே.—உமக்கு வயதுக்தெரியாதென்று சொன்னீரே அதன் காரணம் என்ன? கேட்டதற்கு பதில் சொல்லும்

வி.—நானின்ன காலத்திலுண்டானவனென்று குறிப்பிடக் கூடாமையினால்தான் தெரியாதென்று சொன்னேன்.

கே.—உம்முடைய மதம் என்ன ?

வி.—எத்தனை மறைகளுக்கும் எத்தனை மந்திரங்களுக்கும் எட்டப்படாத கர்த்தனைக் கருணைசெய்யென்று நித்தம் நித்தந் தொழுவதெங்கள் மதம்.

கே.—உம்முடைய குலமல்லது ஜாதி என்ன ? கோத்திரம் என்ன ? மானமென்ன ? சாஸ்திரமென்ன ? நீதி என்ன ? இவ்வரலாறுகளை ஒவ்வொன்றாய்ச்சொல்லும்.

வி.—அத்தனே காத்தனே பரனே பராபரனே நானென்று மறியேனென்று கத்திக்கத்தி ஆனந்த நீர் விடுவதெங்கள் விழிகள். பக்தர்கள்மிலேசசரென்று நிந்திக்கும்போது பகவத்பாதங்களைப் பற்றி சுகம்பெறுவதெங்கள் விழிகள். உறுகினைற பாஞ்சாலிக்கு உடையளித்தவனை ஓதியோதி புகழ்வதெங்கள்மானம். ஸப்த முனிபிருகு நாரத பிரஹலாத பராசர புண்டரீக வியாஸவஷிஷ்ட விசுவாமித்திர அம்பரிஷ சுகர் சவுனகர் பீஷ்மர் முதலான முன்னோர்கள் துதித்துச் சாத்திய மறைகளின்படி அவனுடைய விமல பாதம் தொழுவதெங்கள் சாஸதிரம். திட்டி வெட்டிக் குட்டினும் அஷ்டாக்ஷரபஞ்சாக்ஷரப் பொருளை துதித்திருப்பதெங்கள் கோததிரம். பின்னுமெங்கள் ஜாதிசுக்கிலம்.

போதும் போதும்—உம்முடைய புராணம் போதும்.

1-வது பிரதிவாதி இராகருவுத்தனை விசாரணை:—

(ஷை தரப்பு வக்கீல்களால் விசாரிக்கப்படுகிறது.)

கே.—நீ எந்தவூர் ?

வி.—நானிருப்பது ஜீவகோடிகளின மனோராஜ்யத்தில் முக்காலங்களிலும் வசித்துவருகிற சிதாபாசக்குடி.

கே.—உன்பெயரென்ன ?

வி.—இராகருவுத்தனென்ற பெயர்.

கே.—உன் தொழிலென்ன ?

வி.—எனக்கு நல்ல ரூபவதியாயும் குணவதியாயும் அமைந்த அக்கினிசாக்ஷியாய் பாணிக்கிரகணம பண்ணினபெண்டீரிருந்தாலும் பிறர்மனைவிகளான பரஸ்திரிகமனம்பண்ணவேணுமென்கிற

சிதத விருத்திக்கி இராகமென்று பெயா. அப்படிக்கொத்த பெயரைக் கைவிடாமல் சகல ஜீவகோடிகளுட் புகுந்து அப்படிக் கொததகுணங்களை நிலைநாட்டி கீர்த்திபெறச்செய்வதைத் தவிற வேறுதொழில தெரியாது.

2-வது பிரதிவாதி துவேஷ மூர்த்திராவ்.

கே.—நீ எந்தவூர் ?

வி.—சிதாபாசக்குடிதான் நானிருப்பதும்.

கே.—உன் பெயரென்ன ?

வி.—என்பெயர் துவேஷமூர்த்திராவ்.

கே.—உன் தொழில் என்ன ?

வி.—என்னுடைய எண்ணத்தின்படி ஓர்மை உதவிக்கு வாராமலும் அதைக்கெடுத்து அபகாரம் செய்பவர்களிடத்தில் அப்படிகொத்தவர்களுக்கு எநதக்காலத்திலும் பிரதி அபகா ரம்செய்யவேணுமென்று துவேஷம் வைத்து நிலைநாட்டி வைப் பதுதான் என்தொழில்.

3-ம் பிரதிவாதி காமாநாயக்கன்.

கே.—நீ எந்த ஊா ?

வி.—ஷெ யூாதான்.

கே.—உன பெயரென்ன ?

வி.—என பெயர் காமாநாயக்கன்.

கே.—உன் தொழிலென்ன ?

வி—எனக்கு விஸ்தரமான இல்லிடம், சருவமானிய ஏக போக கிராமம, ஆபரணம், தனம், தானியம் இதுகள் சம்பூரண மாயிருநதாலும இன்னமுமநேகம் சம்பாதிக்க வேணுமென்ற சித்தவிருததிதான் எனக்குத தொழில்.

4-ம் பிரதிவாதி குரோதப்பையர்.

கே.—நீ எநதவூர் ?

வி.—நானும் ஷெ யூர்தான்.

கே.—உன் பெயரென்ன ?

வி.—என்பெயர் குரோதப்பையா.

கே.—உனக்குத தொழிலென்ன ?

வி.—எனக்கு வேண்டிய காரியஙகளில் விக்கினம பண்ணி னுலும, என் பொருளை யாராவது அழிததாலும், அவர்களிடத் தில ஆககிரமமாக விகர்ப்பிததுவருகிற சிததவிருததிக்கு குரோத மெனகிற பெயர்வகிததேன. அதை நான் சகல ஜீவகோடிகளுக் கும் போதித்துவைப்பதே எனககுத தொழில.

5-ம் பிரதிவாதி லோபநாதபிள்ளை.

கே.—நீ எநதவூர் ?

வி.—தெயூர்தான.

கே.—உன் பெயரென்ன ?

வி.—என் பெயா லோபநாதபிள்ளை.

கே.—உனக்குத் தொழிலென்ன ?

வி.—எனக்கு அளவில்லாத சொதது இருநதாலும் இன் னம் எநதவிதத்திலாவது பணம் சேகரம செய்வதை தவிர, அதி னின்று ஒரு காசுகூட சிலவு செயயக்கூடாதென்ற சித்தவிருத் திக்கி லோபநாதபிள்ளையென்ற பெயரை நானவகிததேன். நான யாவத்திராளுடைய மனதிலிருநது கொண்டு அப்படிக் கொதத எனனுடைய குணத்தை விருததிசெய்து வைப்பதே என் தொழில.

6-ம் பிரதிவாதி மோகநாத பண்டிதா.

கே.—நீ எநதவூா ?

வி.—தெ யூரதான்.

கே.—உன் பெயரென்ன ?

வி.—என பெயர் மோகநாத பண்டிதா.

கே.—உன் தொழிலென்ன ?

வி.—நான் தேடி சமபாதித்த பதார்த்தத்தின்பேரில் பிர மாதமான ஆசையை விகர்ப்பித்துக் காட்டுகிற சிதத விருத்திக்கு மோகமென்ற பெயர். ஜன்மாந்தர வாசனையினாலது எனக்குக்

கிடைத்தது. அப்படிக்கொத்த குணத்தை நான் விடாமல் சகல ஜீவகோடிகளுக்கும் அதை உபதேசித்துவைப்பதே என்தொழில்.

7-ம் பிரதிவாதி மதத்தநாயுடு.

கே.—நீ எந்தவூர் ?

வி.—செடியூர்தான்.

கே.—உன் பெயரென்ன ?

வி.—என்பெயர் மதத்தநாயுடு.

கே.—உனக்குத தொழிலென்ன ?

வி.—எனக்கிருக்கிற ஐசுவரியச செருக்கினால் கெருவங் கொண்டு கிருத்தியா கிருததியங்களைப் பாராமலும், பாபபுண்ணி யங்களை நினையாமலும், விகாப்பிததுக் காட்டுகிற சித்த விருத்தி க்கு மதமெனறு பெயர். நான் அதை சகல ஜீவகோடிகளுக்கும போதிதது அசைய வொட்டாமல் திடப்படுத்தி வைப்பதுதான் என் தொழில்.

8-ம பிரதிவாதி மாச்சரிய முதலியார்.

கே.—நீ எநதவூர் ?

வி.—செடியூரதான்.

கே.—உன பெயரென்ன ?

வி.—என்பெயர் மாச்சரிய முதலியார்.

கே.—உன்தொழிலென்ன ?

வி.—ஒருவன்சுகமாயிருந்தாலும், விததுவனாயும், நாலுபே ருக்கு கௌரவமாயிருந்தால், அதைநான்பார்த்து கொஞசங்கூட சகியாமல விருததியடைய விகாப்பித்து வருகிற சித்தவிர்த்திக்கு மாசசரிய முதலியாரென்ற பெயர் வந்தது. அது என்னைவிட்டு கொஞசங்கூட மாறாது. ஆகையால் நான்பிறர்வாழ சகியாமலிருக் கிற சித்த விருத்திதான தொழில்.

9-ம பிரதிவாதி ஈருஷை செட்டியார்.

கே.—நீ எநதவூர் ?

வி.—செடியூர்தான்.

கே.—உன் பெயரென்ன ?

வி.—என் பெயர் ஈருஷை செட்டியார் என்று பெயர்.

கே.—உனக்குத் தொழிலென்ன ?

வி.—எனக்கு வந்த துக்கமும் கேழ்த்தன்மையும் பிறருக்கும் வரலாகாதோவென்று விகாரப்பித்துக்காட்டுகிற சித்தவிருத்திக்கு ஈருஷை செட்டியாரென்ற பெயரை வகித்தேன். ஆனதால் எனக்குக்கிடைத்த அப்படிக் கொத்த குணத்தைவிடாமல் சகலருக்கும் திடப்படுத்தி வைப்பதே என் தொழில்.

10-ம் பிரதிவாதி அஸூயை ஐயங்கார்.

கே.—நீ எந்தவூர் ?

வி.—ஷை யூர்தான்.

கே.—உன் பெயரென்ன ?

வி.—என் பெயர் அஸூயை ஐயங்கார்.

கே.—உன் தொழிலென்ன ?

வி.—நான் அடையும் சுகம் எனக்கு வரும் லாபம் கீர்த்தி சன்மானம் பாக்கியம் இதுகள் பிறருக்கும் வரக்கூடுமோ, நானே அதுகளை அனுபவிக்க வேணுமென்ற சித்த விருத்திக்கு அஸூயை ஐயங்கார் என்ற பெயர் வந்தது. இப்படிக்கொத்த பெருமையான குணம் எனக்குரியது. இது என்னை அகலவிடாமல் ஸ்திரப்படுத்திவைப்பதே எனக்குத் தொழில்.

11 ம் பிரதிவாதி டம்ப ராஜா.

கே.—நீ எந்தவூர் ?

வி.—ஷை யூர்தான்.

கே.—உன் பெயரென்ன ?

வி.—என் பெயர் டம்பராஜா.

கே.—உன் தொழிலென்ன ?

வி.—நான் செய்த தான தருமங்களும் பரோபகாரங்களையும் கண்டு பலபேர்களும் புகழ்ந்து சொல்லிக்கொள்ளவேணுமென்று விகாரப்பித்துக் காண்பிக்கிற சித்த விருத்திக்கு டம்பீ

ராஜாவென்ற பெருமையான பெயர் எனக்குக் கிடைத்தது. அப்படிக் கொத்த பெயரை கைவிடாமல் சகல ஜீவகோடிகளுள் புகுந்து அதை மாறவிடாமல் ஸ்திரப்படுத்தி வைப்பதே என் தொழில்.

12-ம் பிரதிவாதி தாப்பயபத்தன்.

கே.—நீ எந்தவூர் ?

வி.—ஷை யூர்தான்.

கே.—உன் பெயரென்ன ?

வி.—என் பெயர் தாப்பயபத்தன்.

கே.—உனக்குத் தொழிலென்ன ?

வி.—என்னைக்காட்டிலும ஐசுவரியத்திலும, கீர்த்தியிலும, குணத்திலும, ரூபத்திலும, இன்னமொருவனிருக்கிறானென்று விசாரித்துக் காட்டுகிற சித்த விருத்திக்கு தாப்பயபத்தனென்ற பெயர் வந்தது. நான் சகல ஜீவர்களுடைய மனதுக்குள் புகுந்து என் பெயரை சிரேஷ்டப்படுத்தி வைப்பதே என் தொழில.

13-ம பிரதிவாதி அகங்காரச்சாம்பான்.

கே.—நீ எந்தவூர் ?

வி.—ஷை யூர்தான.

கே.—உன் பெயரென்ன ?

வி.—அகங்காரச சாம்பானென்ற பெயர்.

கே.—உன் தொழிலென்ன ?

வி.—அடே பயலே என்னை நீ யறியாயோ; என் சேதி தெரியாதா ; நான் பிடித்த காரியத்தை விடுவேனா, என்னை எதிர்த்தவன் கெடவில்லையா ; நான் முன் வைத்த காலை பின் வாங்குவேனா; நீ தானா எனக்கு புத்தி சொல்லுகிறவன் என்று ஆக்கிரமித்து வருகிற சித்தவிருத்திக்கு அகங்காரச சாம்பனென்ற பெயர் எனக்குரியது. நானதை எப்போதும் இடைவிடாமல் சகல ஜீவகோடிகளுடைய ஹிருதயத்தில வசித்து வருகிற முக்கிய பிராண தேவுடுகானே. ஷை ஜீவகோடிகள் என்னையே முக

மாய் ஆராதித்து வருகிறார்கள், ஆனாலும் அவர்களுடைய மனோரதத்தை பூர்த்திசெய்து சாசுவதமானபெயரெடுத்து மேன்மையை அடையச் செய்கிறதே எனக்குத் தொழில்.

இனிவாதித்ரப்புசாக்ஷிகள் விசாரிக்கப்படுகிறார்கள்.

1-வது சாக்ஷி விவேக தீக்ஷதர்.

(வாதி வக்கீல்களால் விசாரிக்கப்படுகிறது)

கே.—உமக்கு எந்தவூர்?

வி.—நானிருப்பது ஸாதவீகபுரம்.

கே.—உம்முடைய பெயரென்ன?

வி.—என் பெயர் விவேக தீக்ஷதர்.

கே.—பிரமாணமாய்ச்சொல்லும்?

வி.—பிரமாணமாகவே சொல்லுகிறேன்.

கே.—இந்த நம்பரின் பிரதிவாதிகளை உமக்குத் தெரியுமா?

வி.—தெரியும்.

கே.—என்ன விதமாய்த் தெரியும்?

வி.—நானிருக்கும் க்ஷேத்திரத்திலேயே இவர்களும் சஞ்சரிக்கிறவர்களாகையால் இவர்களெல்லோரையும் எனக்குத் தெரியும்.

கே.—இவர்களில் முதல் பிரதிவாதி இராகரூவுத்தனுடைய நடவடிக்கை என்ன?

வி.—இவன் பூர்வத்தில் திருலோகாதிபதியாகிய இராவணேசுவரனை மயக்கிவைத்து அதிஞலவன ஸாக்ஷாத் லோகமாதாவாகிய ஜானகியை அபகரித்து, அதன் நிமித்தம் அவன் புத்திர மித்திர களத்திராதிகளை இழந்து பிராண ஹானியாய் இகபரங்களில் அபகீர்த்தியை யடைந்தான். பின்னும் சுந்தோபசுந்தர்களை மயக்கி அதிஞலவர்கள் திலோத்தமையைக் கண்டு என் பாரியை உன் பாரியையென்று அடித்துக்கொண்டு அழியும்படி செய்ததும், இன்னம் இப்போதைக்கும் பரஸ்திரி கமனம் செய்யும்படியாய் தூண்டிவிடுகிற தொழில் அவனுக்கு எப்போதுமே; இவன் விஷயம் இது எனக்குத் தெரியும்.

கே.—2ம் பிரதிவாதி துவேஷமூர்த்திராவ்செய்கைகளென்ன?

வி.—இவன் பூர்வத்தில் ஹிரணியகசிபு வென்பவனுக்கு போதித்து அதினாலவன் தன தமையனைக் கொன்ற ஸ்ரீமன்-நாராயணனைக்கொல்லவேணுமென்று நினைப்புண்டாகிஅது நிமித்தம அவன் மாண்டானுகையால அவனும் மிகுந்த கெட்டவனென்றும தெரியும.

2-வது சாக்ஷி வாயுபுரம் மாருதாசாரியார.

கே.—உமக்கு எந்தவூர ?

வி.—நானிருப்பிடம வாயுபுரம.

கே.—உமமுடைய பெயரென்ன ?

வி.—என்பெயர மாருதாசாரியார.

கே.—இந்த நம்பரில உமக்குத் தெரிந்ததை வாஸ்தவமாய்ச்சொல்லும ?

வி.—எனக்குத் தெரிந்ததை வாஸ்தவமாயச சொல்லுகிறேன்.

கே.—இதில் 3-ம பிரதிவாதி காமாநாயக்கனைத் தெரியுமா?

வி.—தெரியும்.

கே.—என்னவிதமாகத தெரியும ?

வி.—நானிருக்குமிடஙகளில அடிக்கடி சஞ்சரிக்கிறவனைதால் நன்றாய்த தெரியும.

கே.—இவன் நடவடிக்கைகளென்ன ?

வி.—இவன் பூரவததில் நரகாசுரனென்பவனுடைய மனதுள் புகுந்துபோதிதது, அதனாலவன இலக்ஷம ஸதிரீகளைகலியாணம் பண்ணவேணுமென்ற எண்ணமாகி, தேவஸ்திரீகளை பதினாயிரம் பேர்களை சிறைபிடித்துவநது, அதின்நிமித்தம் ஸ்ரீகிருஷ்ணபகவானால் நாசமடைந்தானுகையால இவன் கெட்டவனென்றுதெரியும்.

3-வது சாக்ஷி விக்ஷிண்ணியகடாக்ஷராயர்.

கே—நீர் எந்தவூர ?

வி.—நானிருப்பது மணிமஙகலம்.

கே.—உம்முடைய பெயரென்ன ?

வி.—என் பெயர் வீக்ஷிணணியகடாக்ஷராயர்.

கே.—இந்த நம்பர் விஷயமாய் உமக்குத் தெரிந்ததை பிர மாணமாயச்சொல்லும ?

வி.—எனக்குத் தெரிந்தமட்டுமோ அவைகளை பிரமாண மாகச் சொல்லுகிறேன.

கே.—இந்த 4-ம பிரதிவாதி குரோதப்பையரைத தெரி யுமா ?

வி.—தெரியும்.

கே.—என்னவிதமாய்த தெரியும

வி.—நான வசிக்குமிடத்தில அடிக்கடி வருகிறபடியால் செமமையாய்த தெரியும.

கே.—அவனுடைய நடவடிக்கைகளென்ன?

வி.—இவன் பூர்வத்தில் பகாசுரன் தனது புசிப்பிறகுவிக் கினஞ்செய்த பீமராஜன் பேரில குரோதம்வரச செய்ததினால்நா சமடையச்செயதான. இப்போதும அநேகாகளை இவனுடைய பராக்கிரமததை உடகொள்ள்ச்செய்து மடியச்செயவதைபாரத் துமிருக்கிறபடியால் இவன கெடுதியுள்ளவனென்று எனக்குத தெரியும

4-வது சாக்ஷி சாந்தலிங்க சாஸ்திரி.

கே.—நீர எந்தவூர் ?

வி.—நானிருப்பது சபதாதிபுரம.

கே.—உம்முடைய பெயரென்ன ?

வி.—என் பெயர் சாந்தலிஙகசாஸ்திரி.

கே.—இந்தகேசில உமக்குத தெரிந்ததை உண்மையாய்ச் சொல்லும் ?

வி.—உண்மையாகவே சொல்லுகிறேன்.

கே.—இதில் 5-ம பிரதிவாதி லோபநாதபிள்ளையைத்தெரி யுமா ?

வி.—தெரியும்.

கே.—என்னவிதமாய்த தெரியும் ?

வி.—இவர் நானிருககுமிடததுக்கு வருவதும் போவது முணடு. அவரை செம்மையாய் நானறிவேன்.

கே.—அவருடைய விருத்தாநதமென்ன ?

வி.—இவர் பூரவத்தில் துரியோதனமகாராஜனுனவன் சூதாடிகெலித்த பஞ்சபாண்டவர்களுடைய இராஜயத்தை அவர்கள்க்குக் கொடுககாமலும் அதில் நின்றும் ஒரு ஊசி முனை அவ்வளவு பூமிகூட கொடுக்கமாட்டேனெனற லோபகுணத்தைபோதித்து அதினுலவனை நாசததையடையச்செய்த மகாலோபி; இவன கெட்டவனெனறு எனககுத் தெரியும.

5-வது சாக்ஷி வாக்குநாதபண்டிதர்.

கே.—நீர் எநதவூர் ?

வி.—நானிருப்பது கர்மேநதிரியநல்லூர்.

கே.—உம்முடைய பெயரென்ன ?

வி.—வாக்குநாதபண்டிதரென்ற பெயா.

கே.—இநத கேசில் உமக்குத் தெரிநததை உறுதியாய்ச் சொல்லும ?

வி.—உறுதியாகவே சொல்லுகிறேன.

கே.—6-ம பிரதிவாதி மோகநாதபண்டிதரைத் தெரியுமா

வி.—தெரியும.

கே.—எப்படித தெரியும் ?

வி.—நானும் பணடிதர் தான்; அவரும் பண்டிதா தான்; நாஙகளிருவரும் ஒருமதாநதான. அவர் நானிருப்பிடத்துக்கு அடிக்கடி வருவார். அவரை எனக்கு செம்மையாய்த தெரியும்.

கே.—அவர் செய்கை என்ன ?

வி.—அவருடைய பட்டப்பெயா மாத்திரம் பண்டிதர் தான; இவர் குணம மாத்திரம் கண்டிதர். அது எப்படி என்ருல் முன்

காலததில் தசரதசக்கிரவர்த்தியானவர் மகாபரிசுத்த ஆத்மா.அப படிக்கொத்த மகாத்மா மனதுக்குள புகுந்து கைகை இடத்தி லும்ஸ்ரீ ராமனிடத்திலும் அதிக மோகம வரசசெய்து அவருடை யமேனமையான கீர்த்தியை பலரும தூஷிக்கச் செய்து வைத்த துநதவிர அவரையும மரணமடையச செய்த கண்டகரிவாதா னென்று எனக்கு நன்றாய்த் தெரியும

6-வது சாக்ஷி அவ்யக்தஞதய்யா.

கே.—நீர எநதவூர ?

வி.—நானிருபபது மேலையூர

கே.—உமமுடைய பெயரெனன ?

வி.—எனக்கு அவ்யகதஞாதயயரெனற பெயர.

கே.—இநத நமபர விஷயததில தெரிநததை எதார்த்தமா கசசொல்லும் ?

வி.—ஐயா நான எதாரததமாகவே சொல்லுகிறேன்.

கே.—நீர நலல வியாபகராயும் மேலையூரானபடியாலும் எல் லாம அறிநதவராகவேயிருக்கவேணுமானதால் இந்த நம்பர பிரதிவாதிகளாகிய 7-8-9-10 எதிரிகளாகிய மதத்தநாயுடு-மாசச ரியமுதலி-ஈருஷை செட்டியார்- அஸூயை ஐயஙகார் இவர்களு டைய நடவடிக்கைகளையும யோககியதைகளையும் ஒவ்வொன்றாய் சசொல்லும ?

வி.—இவாகள நாலவரும என இருபபிடமான மேலையூரு ககு நொடிககி நூறுதடவை வநது போவார்கள். இவர்கள் யோக் கியதையாவும எனககுத தெரிநதவைகள தான். இதில் 7-ம் பிர திவாதி மததநாயுடுவென்பவன் பூரவததில கார்த்தவீரியார்சசு னனுககு மததையுணடுபண்ணி அதினாலவன் தன்னிடத்தில் வ நத மஹாரிஷியான நாரதஸ்வாமியை மதிக்காமலும் உபசாரம் பணணாமலும் கொவிததிருந்ததைக்கேடட பரசுராமனால் பிரா ணஹானி பநதுநாசம இராஜயஹானி இகபரஙகளிலபகீர்த்தி இவைகளையடையசசெயதவன இந்த மதத்தநாயுடு தான்; இவன் கெடடவன.

பின்னும் 8-வது பிரதிவாதி மாச்சரியமுதலியோவென்றால்; முன்னொருகாலத்தில சிசுபாலனென்பவனுக்கு இவனுடையகுணத்தை போதித்து அதினாலவன இராஜஸூயயாகத்தில் அக்கிர தாம்பூலம வாங்கத்தக்கவனாரென்று விசாரித்து ஸ்ரீ கிருஷ்ணபகவானுக்குக்கொடுத்ததை சகிக்காமல், அந்தசிசுபாலன் பிராணஹானிபந்து நாசம் இராஜயஹானி இகபரங்களிலபகீர்த்தியையடைய இந்த மாச்சரியமுதலியே காரணம்; இவன் மிகவும கெடுதியுள்ளவனென்று தெரியும

பின்னும ஈருஷை செட்டியாரோவென்றால, முன்னொருகாலத்தில் அருணுசூதனென்பவனுக்கு இந்த புத்தியை போதித்து அதினாலவன தனக்குவந்த தூக்கம தனதிஷ்டனான வாணாசுரனுக்கு வரலாகாதாவென்றெதிர்த்த ஈருஷை குணத்தினாலவன பிராணஹானி பந்துநாசம இராஜயஹானி இகபரங்களிலபகீர்த்தி இவை முதலானதுகளை அடைய இந்த ஈருஷை செட்டியார் தூண்டுதலினாலேயே; இவனும கெட்டவனே.

அஸூயை ஐயங்காரோவென்றால பூர்வத்தில் பவுண்டரீக வாசுதேவனிடமனதில புகுந்து அதினாலவன• தனக்கும வாசுதேவன், ஸ்ரீ கிருஷ்ணனுக்கும வாசுதேவனென்று பெயராவென்று, அஸூயை குணத்தினால அவரிடமெதிர்த்து பிராணஹானி பந்துநாசம் இராஜ்யஹானி இகபரங்களிலபகீர்த்தி இவைகளை அடையச்செய்துவைத்ததும இந்த அஸூயை ஐயங்காருடைய குணந்தான. இவன மிகுதியான கெடுதியுள்ளவனென்றும எனக்குத தெரியும.

7-வது சாக்ஷி புராதனஸ்ரௌதி.

கே.—ஸ்வாமிகள் எந்தவூர்?

வி.—நானிருப்பது பராசீனபுரம.

கே.—தங்களுடைய பெயரென்ன?

வி.—புராதனஸ்ரௌதியென்று சொல்லுவார்கள்.

கே.—இந்த நம்பரின 11-வது பிரதிவாதி டம்பராஜாவை தங்களுக்குத தெரியுமா?

வி.—ஆஹா ரொம்ப அறிவேன்.

கே.—எப்படிக்கு அறிவீர்கள்?

வி.—இவர் நான் வசிக்குமிடத்தில் அதிக கெம்பீரத்தோடே தளுக்குப்பிளுக்கோடே கையில் சவுக்கம் காலில் பாபாசுமிட்டு என்சமீபமாக வந்து, கனைத்து உருமிக்கொண்டு அதிக உற்ஸாகபுருஷனைப் உருட்டி மிரட்டி மீசையை முறுக்கிக்கொண்டு என்னைக்குப் பயங்காட்டுவார். அவரிடம் நான் பேசாவிட்டாலும் அவர் நடவடிக்கை எனக்கு பூராவாகத்தெரியும்.

கே.—அப்படியானால் தாங்கள் மிகவும் பழமையான மனுஷியாளாயும் ஆசார யோக்கியதையுள்ளவர்களாயுங் காணுகிறது. ஆனதால் அவன் விருத்தாந்தத்தை எதார்த்தமாய்ச் சொல்லுங்கள்?

வி.—ஐயா நானிதுவரையில் என் இருப்பிடம் விட்டு எங்கும் போனதேயில்லை. அட்டா ஒரு அபத்தமாகிலும் என் வாக்கால் வராது. தெரிந்ததைச்சொல்லாவிட்டாலும் மகாபாவம் வந்து சம்பவிக்கும். உள்ளதைச் சொன்னால் நானே இந்த டம்பராஜா என்னிருப்பிடம் வந்து அதிகமான பயத்தைக் காட்டுவரே.- நானென்ன செய்வேன்? ஆனாலுமிது பெரிய நியாயஸ்தலம். உள்ளதைத்தான் சொல்லவேணும். சுவாமிரக்ஷித்து சொல்லுகிறேன்.- இவர் முன்னொருகாலத்தில் புரூருவமகாராஜனுக்கு இவருடைய டாம்பீக குணத்தைப் போதித்து, அதினால் அவர் தூர்வாசமஹாரிஷியைப்பார்த்து, நாம் செய்கிற யாகத்தைப்போல யாரால் செய்ய முடியும்! எவன் செய்வான்! இது நன்றாயிருக்கிறதென்று சந்தோஷிக்கக்கேட்ட தூர்வாசஸ்வாமியானவர், யானை துதிக்கையைப்போல ஆயிரம் வருஷம் நெய்யைச்சொரிந்து யாகஞ்செய்தவன் கூட இப்படித்தன்னை புகழ்ந்துகொள்ளவில்லையே என்று சொல்லி, இதென்ன டம்பயாகமென்று சொல்ல, அதைக்கேட்டவுடனே கோபங்கொண்ட நிமித்தம் அவன் யாகத்தோடே பிராணஹானி பந்துநாசம் இராஜ்யஹானி இகபரங்களிலபகீர்த்தி இவைகளையடையச்செய்தவரிவர். இக்காலத்திலும் இவர்குணத்தை சர்வபிராணிகளிடத்திலும் காட்டி நாசமடையச்செய்கிறவர் இவரென்று தெரியும்.

8-வது சாக்ஷி ஸர்ஜனப்பையா.

கே.—நீர் எநதவூர் ?

வி.—நானிருப்பது ஸத்துவக்குடி.

கே.—உமமுடைய பெயரென்ன ?

வி.—ஸர்ஜனப்பையரென்ற பெயர்.

கே.—இநத விஷயததில தெரிநததை சததியமாய்ச் சொல்லும் ?

வி.—சத்தியமாகவே சொல்லுகிறேன.

கே.—இநத நம்பரின 12-ம பிரதிவாதி தர்ப்பபபத்தனையும் 13-ம் பிரதிவாதி அகங்காரசசாமபானையும தெரியுமா ?

வி.—தெரியும.

கே.—எபபடித தெரியும் ?

வி.—இவாகள் நானிருக்குமிடத்திறகு அடிக்கடி வந்து சுததிப்பாாதது போவார்களானதால நன்றாய்த்தெரியும.

கே.—இவாகள நடவடிககைகளெனன? சொல்லும்.

வி.—இதில தர்பபபபததனெனபவன பூாவததில் சதககநதரனவனிடததில இவனுடைய குணததை உபதேசிததது, அதினாலவன் ஐசுவரியத்திலும், ரூபததிலும, தனக்கு சமானமானவனயாருமிலலையெனறு அமராகளுக்கு உபததிரவம் செய்ததை நாரதவைாமிகண்டு ஸ்ரீ இராமனுககு அறிவிததது, அவா தனது பாரியான சீதையினால் அவன பிராணஹானிபந்துநாசம இராஜயஹானி இகபரஙகளிலபகிர்ததியை அடையசசெய்ததது இநத தர்ப்பப்பத்தனுடைய குணத்தினாலே தான. இவன மிககெகெட்டவனே.

பின்னும் அகங்காரசசாமபானெனறால், முன்னொரு காலத்தில் மதுகைடவரென்பவர்களிடத்தில் பிரவேசித்து, இவனுடைய குணததை திடப்படுததிவைத்து, அதினாலவாகள் மகாவிஷ்ணுவோடு பதினாயிரம் வருஷம் யுத்தஞ்செய்து களையாமல் அவர் சந்தோஷித்து வரங்கொடுக்கப போனதை ஆசிக்காமல்

தாயகள அந்த மகாவிஷ்ணுவுக்கு வரங்கொடுக்கிறோம். வாங்கிக் கொள்ளென்று சொன்ன அகஙகார குணததிஞல் பிராணஹானி பநதுநாசம இராஜ்யஹானி இகபரங்களி லபகீர்த்தியையடை யசசெய்தது இநத அகங்காரசசாமபன்தான். இப்போதைக்கும கொலை முதலான பாதகங்களுக்கு இவனே மூலகாரணம். இவன் எல்லோரிலும் அதிகமானகெடடவனெனறு எனககுததெரியும.

இனி கோர்ட்டார் அபிப்பிராயங் கூறுகிருர்.—

இநத நமபரில 1-முதல 8 சாகூிகள வாதி தரபபில் விசாரிககப்பட்டது. அவர்கள் ருஜுவிஞல வாதியின பிராதுக்கு ஒததாகவே ருஜுவாகிறது. எதிரிகள குறறவாளிகளெனறு நாம நினைககிறோம

இதைக்கேட்டதும திடீரென்று எழுந்து பிரதிவாதிகளுடைய வககீலகள சொலலிககொள்வதாவது:—

பிரதிவாதிகள் இப்போதுள்ள 13 போகளைததவிர வேறு மூன்று பெயர்களிருநதுகொண்டிருககிறார்கள. அவாகளேயுமிதில் கூகூிக்காராகளாகசசேரததுககொண்டால எங்கள் தரபபுக்கு ஞாயங்கிடைப்பதுநதவிர, எங்கள தரபபில் 8 சாகூிகளிருக்கிறது. வாதி தரப்பு சாகூிகள் சொல்லிவநததெல்லாம் அபாண்டமான பொயயாகையால, மேறசொலலிய மூவர்கள அதாவது இசசாநாதய்யா. 1. பக்திதீக்ஷதா. 2. சிரததைமூர்த்திராவ். 3. இவாகளேயும சோதது விசாரித்து முடிவு செய்யவேணுமாய் மனு மூலமாய்க் கேடடுககொள்ளுகிறாகள்.

இதினபேரில வாதி ஆதமநாதபண்டிதரை விசாரிக்கப் படுகிறது.

வாதி ஆத்மநாதபண்டிதர்.

கோர்ட்டாரவர்கள கேள்வி —

கே.—உமக்கு பதிமூன்று பிரதிவாதிகளைத்தவிர வேறு மூன்று பேர்வழிகள் பிரதிவாதிகளாக சேர்க்கவேண்டியதாயிருக்கிறதா; வாஸ்தவந்தாஞ?

வி.—மூன்றுபோகளை பிரதிவாதிகளாக சேர்க்கததக்கதல்ல. இசசாநாதயயா. 1. பகதிதீக்ஷதர். 2. சிரத்தைமூர்த்தி

ராவ் 3. இவர்கள் மூன்றுபேர்களும் எனக்குவேண்டிய சாதகத்தைச்செய்கிறவாகளானதால், அவர்களை பிரதிவாதிகளாகச சேர்கக ஞாயமில்லை. சேர்க்கக்கூடாதென்று சொல்வதோடுங்கூட,

ஷெ தரப்பு வக்கீல் விவேக மூர்த்தி ஐயர் சொல்லுகிறர்.

சகல ஜீவாகளுக்கும் பந்தமென்ன, மோக்ஷமென்ன, இவைகள் மனதினுலேயே உண்டாகிறது. வேறு எதனுலுமாகவில்லை. அது எப்படியெனில ஸ்வபாவமாகவே மனதானது நிமலமுள்ளது அப்படி நிர்மலமுள்ள மனதை அசுத்தங்களாகிற இராகாதி 13 பிரவாததிகளுடைய பநதங்களை அணுகவொட்டாமல் இனி ஏதாவது நருளவருமோ, இன்றைக்கிருப்பாா நாளை இல்லை; சுவரைவைதது சிததிரமெழுதவேணும; காற்றுள்ளபோதே தூறறிவிடவேணுமெனறு தூணடுதல்செய்து தடடிக்கொடுத்து வருகிறதானது இசசை. இன்னமும் ஜபம, தபம, விருதம, ஹோமம இயாகம பல புணணிய கருமங்களைச்செய்து வரவேணுமாய்த தோறறி வைக்கிறதானதும் இச்சை. அதினுல சகலபிராணிகளும கிரமக்கிரமமாக ஏரிவநது புருஷார்ததததை அடையசசெய்வதானது இசசையே. பின்னும் இச்சையானது மேலிட்டு சறகுருவைத்தேடி அவராலஉபதேசம்பெற்று மனதை அசுத்தாதிகளில் சேரவிடாமல் நிமலமாக்கி குருவினிடமபக்தியைசசெல்ல வைககிறது. பகதி அதிகரிததபோது குருவாக்கியததினிடததிலும், வேதாநத வாக்கியத்தினிடத்திலும், ஈஸ்வரனிடத்திலும், அதிகமான சிரததை உண்டாகிவிடுகிறது. இப்படிககு இநத இசசா-பக்தி-சிரததை இமமூன்றும என கக்ஷிககே சாதகமுள்ள புருஷர்களானதால அசத்தஙகளாகிய இராகாதி பதிமூனறு பெயர்களுடன சேரக்கூடாதென்றும, இந்த மூவாகளையுமநீககிய பதிமூன்று பிரதிவாதிகளைமாததிரமே தண்டிக்கவேண்டியதாயிருக்கிறதென்று வாதி வக்கில விவேகமூாததிஐயா சொல்லிவிடடுகுநதினர்.

பிரதிவாதி வக்கில் மண்ணுசை உடையார் எதிர் வாதம் பேசுகிறர்.

வாதி ஆக்ஷேபமானது சுதத பிசகு. ஷெ தரப்பு வக்கில் சொல்வது முழுமையும் விரோதம். யாதெனில் இநத இராகாதி பதிமூன்று விருத்திகளுக்கும் மனமே மூலகாரணம. அபபடிக்

கொத்த மனதின் தூண்டுதலினாலேயே இந்த இராகாதிகள் அவரவர்களுக்கு ஏற்பட்ட கருமங்களைச்செய்து வருகிறார்கள். அதற்கு இந்த மனமே ஆதிபூதம். எப்படியெனில் நதிகளுக்கு சமுத்திரம் கதிபோலவும், ஸ்திரிகளுக்கு புருஷனே கதிபோலவும், சிஷனுக்கு ஆசான் கதிபோலவும், தலையின்பேரில நெருப்புப்பற்றியெரிகிறவனுக்கும நாக்குவரண்டவனுக்கும தண்ணீர கதிபோலவும, இந்த இராகாதிபதிமூன்று விருத்தங்களுக்கும மனமே கதி. மேலும ஜலவிஸர்ஜனை மலவிஸர்ஜனை பண்ணவேணுமெனறு மனதுக்கு இச்சையுண்டாகிறது. அதறகு உபகருவிகளாக பக்கிலிருந்து சேருகிறது. அதினால பாதைகள் நிவாததியாகி சுகம்பெறுகிறான். இமமூவரும் கலந்காவிட்டால சரீரததுக்கே அபாயமுண்டாகிவிடுகிறது. ஆகையால இவாகளை நீககிவிட ஞாயமே இல்லை. இம்மூவாகளும எனககிககு சாதகமுளளவாகளேயாம. கக்ஷிக்காராகளாகவே சேர்ககவேணுமென்றே எதிா தரப்பு வக்கில் மண்ணுசை உடையார் சொலலிவிட்டு குநதினா

மறுபடி வாதிதரப்பு வக்கீல் வைராக்கியராயா பேசுகிறார்.

பிரதிவாதி தரப்பு வககில சொலலுவது முழுமையும் சட்டத்துககு விரோதமானவைகள் யாதெனில முனனொரு காலத்தில் "சுகபிரமரிஷி" எனபவா பரிக்ஷித்து மகாராஜனுககு காண்பித்த 'பாகவதம்'' எனகிற ஒரு "லா'' புஸதககததில ஒருதீர்மானம விவரிக்கபபட்டிருககிறது. எபபடியெனறால இநத பூமண்டலததில் சககிரவாத்தியாயும், மகாபலபராககிரமசாலியாயும, நல்லநீதியோடு ராஜபரிபாலனஞ்செயது வந்த கட்வாங்கனெனகிற ஒரு ராஜனிருக்குமபோது, தேவலோகததில் தேவதைகளுக்கும் அசுராகளுககும சண்டை வநது, தேவர்களாலே யுத்தஞ்செய்யமாட்டாமல் கட்வாஙகனை தேவலோகத்துக்கு அழைத்துக்கொண்டுபோய், அசுரர்களிடததில யுத்தஞ்செய்யச் சொல்லி, அந்தப்படி அவன் யுத்தஞ்செய்து அசுராகளைநாசஞ்செய்து தேவாளுக்கு ஜெயம்பண்ணிககொடுத்தபடியினாலே, அவர்களும் சந்தோஷித்து என்ன வரம் வேணுமென்று கேட்டபோது எனக்கு யாதொன்றும் குறைச்சலில்லை; ஆனால் என்னுடைய ஆயுளின் பிரமாணத்தை மாத்திரம் தெரியசசொல்லவேணுமென்று கேழ்க, உனக்கு ஆயுள் வெகுநாளில்லை; இன்னம் இரண்டு

நாழிகைதான் ஆயுள் இருக்கிறதெனறு தேவர்கள் சொல்லக்கே ட்டவுடனே பரப்பரப்போடு பூலோகம் வந்து, தன குருவிடம போய்வேதாந்த நிச்சயததைக்கேட்டு ஈஸ்வரனிடததில இசைசபகதி-சிரத்தைபண்ணி இரண்டே நாழிகையில மோக்ஷமடைந தாரென்று இந்த "லா" புஸ்தகததில் கண்டிருப்பதை கோட டார கவனித்து இம்மூவரும என் கக்ஷிக்கே சாதக புருஷாக ளென்றுசொல்லி குந்தினா.

இதின்பேரில் கோட்டார் "லா" புஸ்தகத்தைபபாா ததுவிட்டு சற்று யோஜித்து,இந்த மூவர்களையும கக்ஷிக்காரர்களாக சேர்க்கததக்க திலலையென்று பிரதிவாதிகளின் மனுவைத்தள்ளி போட்டதாக உத்திரவு செய்தபின,

பாததிய மனுக்கொடுத்த சிதாபாசய்யரை விசாரிக்கிறா.

கே.—நீ எநதவூா ?

வி.—நானிருபபது மோகனூர்.

கே.—உன பெயரென்ன ?

வி.—என பெயா சிதாபாசய்யா.

கே.—உறுதியாய்சசொலலு ?

வி.—உறுதியாய்ச் சொலலுகிறேன்.

கே.—உனக்கு இந்த நம்பரில் எவ்வித பாத்தியம ?

வி.—தேகமே நான். சகல ஆஸ்திகளும என்னுடையது. சம்பாததியஞ்செய்தது நானே. பெண்டாட்டி பிள்ளைகள் என்னுடையது. நானே பரிபாலனம் பண்ணுகிறவன். என் கையாலேதான் எலலாவறறையுஞ் செய்கிறேன். சகல பாக்கியமும் என்னுடையது. இநத பதிமூன்று பிரதிவாதிகளுக்கும் தலைமையானவன் நானே. இந்த வாதிக்கு யாதொரு பாத்தியமுமில்லை. வாதி தரப்பு சாக்ஷிகள் சொன்னது யாவும கட்டுப்பாடானபடியால், தயவுசெய்து என்னுடைய பாததியத்தைஸ்தாபிக்கவேணுமாய் சிதாபாசய்யா அறிவிக்கிறார்.

இதன்பேரில் கோட்டா சிதாபாசய்யரை 14-வது சுபனிமெண்டு பிரதிவாதியாய் சேர்க்கபபட்டிருப்பதாக உததிரவு செய்தாாகள்.

பிரதிவாதி தரப்பு சாக்ஷிகளின் விசாரணை.

1-வது சாக்ஷி அனாத்மநாத செட்டி

(ஷை தரப்பு வக்கீலால கேழ்கப்படுகிறது.)

கே.—நீர் எந்தவூர்?

வி.—நானிருப்பது கோசமாபுரமென்றும அன்னமயகோசமென்றும சொல்லப்பட்டது.

கே.—இந்த நமபர் பிரதிவாதிகளையும வாதியையும தெரியுமா?

வி.—நன்றாய்த்தெரியும.

கே.—அவர்களுடைய விருத்தாந்தங்களில் உமக்குத் தெரிந்ததை உண்மையாய்ச் சொல்லும?

வி.—எனக்குத்தெரிந்ததையுண்மையாய்ச் சொல்லுகிறேன். இந்த பதினொரு எதிரிகளின் ஸ்வபாவமானது மிகவும்மேன்மையானவைகள். அவர்கள் மிகவும் வரபிரஸாதிகள். ஒவ்வொருவரும் பலபராக்கிரமசாலிகள். அவர்களில்லாவிட்டால் இந்த பிரபஞ்சமேயில்லை. இவர்கள் தனக்குத்தானே தோன்றினவர்கள். யாராலும உண்டுபண்ணப்பட்டவர்களல்ல. ஒரு வம்சத்தை ஒட்டினவர்களுமல்ல. இதற்கு வாக்கியம —

सच्चिदानंद स्वरूपे स्वात्मन्यारोपितं वपूः ।
स्थुलं तस्यस्वरूपंतु तावत्तत्रनिरूप्यते ॥ १ ॥

இதன் பொருள் —ஸச்சிதாநந்த ஸ்வரூபமான தன்னிடத்திலிருந்து ஸ்தூல சரீரம் ஆரோபிக்கப்பட்டது. அதின்விவரமாவது.—

अस्तिमांसत्य॰जोनाडिरोमचै व यथा तथा ।
क्षितिः पैचविथः प्रोक्तासमांशाः परिकीर्त्तिताः ॥ २ ॥

இதன் பொருள்:—அஸ்தி-மாம்சம்-சருமம்-நரம்பு-ரோமம் இவ்வைந்தும் பிருதிவியின் அம்சம். இதற்கு விவரமாவது:—

பிரதிவியினிடத்தில் பிரதிவி-அஸதி, பிரதிவியினிடத்தில் அப்பு-மாமசம், பிரதிவியினிடத்தில் தேயு-தோல், பிரதிவியினிடத்தில் வாயு-நரம்பு, பிரதிவியினிடத்தில் ஆகாசம்-ரோமம், இவ்வைந்தும பிரதிவியின கூறாகும்.

लालामात्रंतथास्वेदाः शुक्लंश्रोणितमेव च ।

आपः पंचविधाः प्रोक्ताः समांशाः परिकीर्तिताः ॥ ३ ॥

இதன் பொருள்:—வாய் நீர்-மூத்திரம்-வியர்வை-உதிரம்-சுக்கிலம-இவைவைந்தும அப்புவின் அமசம். இதற்கு விவரமாவது.—

ஜலத்தினிடத்தில மண்-வாய் நீர், ஜலததினிடத்தில் ஜலம்-மூத்திரம், ஜலததினிடத்தில நெருப்பு-வியாவை, ஜலததினிடத்தில வாயு-ரகதம, ஜலத்தினித்தில் ஆகாசம்-சுக்கிலம இவ்வைநதும் அபபுவின கூறு.

क्षुधातृष्णा तथानिद्रा आलस्यं संगमं तथा ।

अग्निः पंचविधाः प्रोक्तासमांशाः परिकीर्तिताः ॥ ४ ॥

இதன் பொருள் —பசி-தாகம-நித்திரை-சோம்பல்-சங்கமம-இவ்வைநதும தேயுவின் அமசம இதறகு விவரம்:—

நெருபபினிடததில மண்-பசி, நெருப்பினிடததில் ஜலம-தாகம, நெருப்பினிடததில் நெருபபு-நிததிரை, நெருப்பினிடததில ஆகாசம-சங்கமம், இவ்வைநதும அக்கினியின் கூறு.

धावनंफल्गुनंचैवकुंचनं च प्रसारणं ।

वायुः पंचविधाः प्रोक्ताः संमांशाः परिकीर्तिताः ॥ ५ ॥

இதன் பொருள் —கிடத்தல்-நடததல்-இருததல்-ஓடல்-தத்தல்-இவ்வைந்தும வாயுவின் அம்சம். இதற்கு விவரம்.—

வாயுவினிடத்தில் மண்-கிடததல், வாயுவினிடத்தில் ஜலம்-நடத்தல், வாயுவினிடத்தில் அக்கினி-இருத்தல், வாயுவினிடத்தில் வாயு-ஓடல், வாயுவினிடத்தில் ஆகாசம்-தத்தல், இவ்வைந்தும் வாயுவின் கூறு.

रागद्वेष भयं लज्जा मोहंचैव यथा तथा ।
नभः पंचविधाः प्रोक्तः संमांशाः परिकीर्तिताः ॥ ६ ॥

இதன் பொருள் —ராகம்- துவேஷம் - பயம் - வெட்கம்- மோகம்-இவ்வைந்தும் ஆகாயத்தின் அம்சம். இதின் விவரம்:—

ஆகாயத்தினிடத்தில் மண்-ஆசை, ஆகாயத்தினிடத்தில ஜலம்-துவேஷம், ஆகாயத்தினிடத்தில் அக்கினி-பயம், ஆகாயத்தினிடத்தில் வாயு-வெட்கம், ஆகாயத்தினிடத்தில் ஆகாயம்-மோகம இவ்வைந்தும் ஆகாயத்தின் கூறு.

ஆக இருபத்தைந்து தத்துவங்களும கூடிய இந்த சரீரமே பிரத்தானமானது. இப்படிக்கொத்த சரீரமானது தனக்குத்தானாகவே அன்னபானாதிகளைக்கொள்ளக்கொள்ள அபிவிர்த்தியாகி, தத்துவங்களின கருமங்களை இடைவிடாமல்செய்துவருவதினால் சரீரம சுகாதிகளை அநுபவித்து வருகிறது அவரவாகளின கருமங்களை விட்டு விட்டால சரீரத்துக்கு அபாயம நேரிடுகிறது. இந்த சரீரம போய்விட்டால வாதி ஆத்மநாத பண்டிதருக்கு இருப்பிடமேது! ஆகையால் அவருக்கு இதில யாதொரு பாத்தியமுமில்லை.

2-வது சாக்ஷி அவிவேகபபத்தன்.

கே.—நீ எந்தவூர் ?

வி.—நானிருப்பது கோசமாபுரமே.

கே —உன பெயரென்ன ?

வி.—என பெயா அவிவேகப்பத்தன.

கே.—உறுதியாய்சசொல்லு ?

வி.—உறுதியாய்ச்சொல்லுகிறேன்.

கே.—இந்த நமபரில் உனக்குத்தெரிந்ததைசசொல்லு !

வி.—இந்த எதிரிகளடங்கிய இந்த சரீரமானது பஞ்ச மகா பூதங்களுள் இருபத்தைந்து தத்துவமாய் பிரிந்திருப்பதுடன் இந்திரியங்களிருக்கிற அவயவங்கள யாதெனில்.—

வாக்கியம்.

अहंचप्राणवायुश्चनासिकागंधमेव च ।
वायुः पंचविधाः प्रोक्ताः इत्येतेभुमिपंचकं ॥ ७ ॥

இதன் பொருள்:—அகங்காரம்-பிராணவாயு-கிராணேந்திரியம்-கந்தவிஷயம்-குஹ்யேந்திரியம-இவ்வைந்தும் பிரதிவியின பஞ்சீகிருதி. இதற்கு விவரம் —

பிரதிவியினிடத்தில் பிரதிவி-குஹ்யேந்திரிய ஸ்தானம இருப்பிடம் குதம,-பிரதிவியினிடத்தில அப்பு - கந்ததன்மாத்திரை, பிரதிவியினிடத்தில் அக்கினி-கிராணேந்திரியம ஸ்தானம் நாசி, பிரதிவியினிடத்தில் வாயு-பிராணவாயு அதின் ஸ்தானம் ஹிருதயம், பிரதிவியினிடத்தில ஆகாசம-அகங்காரம் அதின்ஸ்தானம ஹிருதயம் இவ்வைந்தும் பிரதிவியின் பஞ்சீகிருதி.

चिन्तं चापावनायुश्च जिह्वारस न मेव च ।
गुह्यं पंचविधं प्रोक्तः इत्येते जलपंचकं ॥ ८ ॥

இதன பொருள்:—சித்தம-அபானவாயு-ஜிஹ்வேந்திரியம ரசவிஷயம-குஹ்யேந்திரியம இவவைந்தும அப்புவின் பஞ்சீகிருதி. அதற்கு விவரம —

ஜலத்தினிடத்தில் மண்-குஹ்யேந்திரியம அதின் ஸ்தானம் குய்யம,ஜலத்தினிடத்தில் ஜலம-ரசதன்மாத்திரை, ஜலத்தினிடத்திலஅக்கினி-ஜிவ்யேந்திரியம அதின் ஸ்தானம் சிங்குவை, ஜலத்தினிடத்தில்வாயு-அபானவாயு அதின்ஸ்தானம் குதம, ஜலத்தினிடத்தில ஆகாசம-சித்தம் அதின ஸ்தானம நாபி இவவைந்தும அப்புவின பஞ்சீகிருதி.

बुध्धिश्चोदा न वायुश्च नेत्रं रूपं तथैवच ।
पाणि. पंचविध· प्रोक्तः इत्येते द्वावह्निपंचकं ॥ ९ ॥

இதன் பொருள்:—புத்தி-உதானவாயு-நேத்திரேந்திரியம-ரூபவிஷயம-பாதேந்திரியம் இவ்வைந்தும அக்கினியின பஞ்சீகிருதி. இதற்கு விவரம —

அக்கினியினிடத்தில மண்-பாதேந்திரியம அதினிருப்பிடம் பாதம, அக்கினியினிடத்தில ஜலம்-ரூபதன்மாத்திரை, அக்கினியினிடத்தில அக்கினி-நேத்திரேந்திரியம் அதினிருப்பிடம் நேத்திரம, அக்கினியினிடத்தில வாயு-உதானவாயு அதின் ஸ்தானம் கண்டம, அக்கினியினிடத்தில் ஆகாசம்-புத்தி அதி ... நேத்திரம் இவ்வைந்தும் அக்கினியின் பஞ்சீகிருதி

भानसंव्या न वायुश्च चर्मस्पर्शं तथैवच ।
पादः पंचविधः प्रोक्तः इत्येते द्वायुपंचकं ॥ १० ॥

இதன் பொருள்:—மனது-வியானவாயு-தொக்கேந்திரியம், பரிசவிஷயம்-பாணீந்திரியம் இவைகளைந்தும் வாயுவின் பஞ்சீகிருதி. இதற்கு விவரம்:—

வாயுவினிடத்தில் மண்-பாணீந்திரியம் அதின் ஸ்தானம் அலதம, வாயுவினிடத்தில் அப்பு-பரிசதன்மாத்திரை, வாயுவினிடத்தில் அக்கினி-தொக்கேந்திரியம் அதினிருப்பிடம்தொக்கு, வாயுவினிடத்தில் வாயு-வியானவாயு அதினிருப்பிடம் சர்வசரீரம், வாயுவினிடத்தில் ஆகாசம்-மனது அதினிருப்பிடம் கண்டம், இவைகளைந்தும் வாயுவின் பஞ்சீகிருதி.

ज्ञानंसमानवायुश्च श्रोत्रं शद्बस्त थैवच ।
वाक्च पंचविधः प्रोक्तः ईत्येते द्वयोमपंचकं ॥ ११ ॥

இதன் பொருள்:—ஞானம் சமானவாயு-சுரோத்திரேந்திரியம்-சப்தவிஷயம்-வாக்கேந்திரியம் இவைகளைந்தும் ஆகாயத்தின் பஞ்சீகிருதி. இதற்கு விவரம்—

ஆகாயத்தினிடத்தில் மண்-வாக்கேந்திரியம் அதினிருப்பிடம் வாக்கு, ஆகாயத்தினிடத்தில் அப்பு-சப்ததன்மாத்திரை, ஆகாயத்தினிடத்தில் அக்கினி-சுரோத்திரேந்திரியம் அதினிருப்பிடம் செவி, ஆகாயத்தினிடத்தில் வாயு-சமானவாயு அதினிருப்பிடம் நாபி, ஆகாயத்தினிடத்தில் ஆகாயம்-ஞானம் அதினிருப்பிடம் புருவமத்தியம்; இவ்வைந்தும் ஆகாய பஞ்சீகிருதி.

இப்படிக்கு இந்த சரீரத்தில் அவயவஸ்தானங்களிலடங்கிய தத்துவங்கள், அவரவர்களின் கருமங்களை கைவிடாமல் எத்தியும் இரக்கியும் பந்தோபஸ்தாய் நடத்திவருவதால் சரீரிகள் துன்பத்தையடையாமல்சுகித்துவருகிறார்கள். இவ்வளவு காரியங்களை இந்த எதிரிகள் செய்யாவிட்டால் சரீரத்துக்கு அபாயம் வந்துவிடும். அப்படியானால் இந்த வாதிஆத்மநாதபண்டிதருக்கு கதியேது? அதோகதிதான்.

சாற்றுக்கவிகள்.

திருவளரிராமதாசர் தநெசரிதக்
கீர்த்தனமும் புவியினிற்றிகழ
மருவளாகமல மாலைவேயசின்ன
சாமிமால் [illegible]க்தனை னை தனை
உருவளரிராமக் கிருட்டினனென்னு
முத்தமனை[illegible]ழையாற புனைந்தீர்
குருவளர்கிறமா ணிகவேளச்சிற்
குதவுறவியற்றினன் ம[illegible]தோ.

வித்துவான திருமயிலை

சண்முகம்பிள்ளை அவர்கள் இயற்றியது.

ஆசிரியசசந்த விருத்தம்

இருக்குவிருக்குமுதலாதலின் மற்றதனி
னிருமபொருளைமுழுமுதலென் றியமபிடுமன றிருநாப
பெருககுமலியகலைமாநதப பெருஙகருணைப்பிழமபைப
பெரிதடையுஙகோபனனைப பிரபலகாதையினைச
சருக்கரையுந்தீமபாலுங கைபபைசசெந்தமிழககீாத
தனைவடிவாயெமமனோர் தடஙகருளிசசெயதான
தருக்கணமலிதருபொழிலசூழக் குததநாரசினன
சாமியெனபபுவிபுகழந்தனா குலமாமணியே.

முகவுரை

ஸ்ரீபக்தவத்ஸலனாகியும் ஸ்ரீபக்தபராதீனனாகியும் ஸ்ரீஸ்வயம்ப்ரகாச பரஞ்சோதிர்மய பரமாத்ம ஸ்வரூபியாகியும் "ஸர்வலோகோஜ்ஜீவன பரமபுருஷார்த்த வேதவேதாந்தோபநிஷத்வாக்கிய பிரதிபாத்தியனாகியும் ஸத்வ ரஜஸ் தமோகுண சூன்யனாகியும் பிரகிருதி சம்பந்தமான இச்சத்வாதி குணத்ரயங்களுள்ள திரிமூர்த்திஸ்வரூபமாய் மாயாமோஹித சித்தர்களுக்குப் பிராந்தியினால் தோன்றுகின்றவனாகியும் சுத்த ஸாத்விக விலக்ஷண க்ஞான ஸாதுசஜ்ஜன மனோரஞ்சன நிரதிசயானந்தமாகியும் தோன்றல் மறைதல் குவிதல் விரிதல் முதலிய விகாரமில்லாது தன்னிலே தானேயிருக்கின்ற பராபரவஸ்துவாகியும் நிஸ்ஸார அபார ஸம்ஸார பாராவாரக்கரையாகியும் ஸமானாதிக ரஹிதனாயாகியும் தன்னிலும் வேறொன்றில்லாது தானென்னலாவற்றிருக்கும் மேலானவனாகி அவாங்மானஸ கோசரனுமாகின்ற ஸ்ரீமந்நாராயணனென்னும் சக்கரவர்த்தித் திருமகன்

வைதேஹீஸஹிதம் ஸுரத்ருமதலே ஹைமே மஹாமண்டபே
மத்யேபுஷ்பகமாஸனே மணிமயே வீராஸனே ஸுஸ்திதம்
அக்ரேவாசயதி ப்ரபஞ்ஜனஸுதே தத்வம் முனிப்ய பரம்
வ்யாக்யாந்தம் பரதாதிபி பரிவ்ருதம் ராமம் பஜே ஸ்யாமளம்

என்னும் நம்மத பரம ஹம்ஸ பரிவ்ராஜகாசாரிய ஸ்ரீசங்கரபாத ஸ்வாமிகளாகிய ஆதிசங்கராசாரிய ஸ்வாமிகள் அருளிச்செய்த ஸ்ரீராம கர்ணாமிர்தாந்தர்க்கதமான இந்த ஸ்லோகத்தாத்பரியத்தின் படியே ஸ்ரீ வைகுண்டத்தில் திவ்விய திருமாமணிமண்டபத்தில் சீதா லக்ஷ்மண பரத சத்ருக்னா ஸஹிதராயெழுந்தருளியிருக்க, இந்த ஸ்ரீராமபரப்பிரம்மமூர்த்தியின் சந்நிதியிலுள்ள நித்ய முக்தர்களான முநீஸ்வரர்களின் பொருட்டு ஸ்ரீ ஆஞ்சநேயமூர்த்தி பரதத்வத்தை வெளியிட்டுக்கொண்டிருந்த காலத்தில், ஸ்ரீபக்தவிஜயகர்த்த பிரமாணதாஸராமாய் இப்பூலோகத்தில் பெருமைதங்கிய வனத்தில் அருமையுள்ள பிரம்மநிஷ்டையி லெழுந்தருளிய சகல ரிஷிகளும் சுவர்க்கலோகவாசிகளான தேவர்களுடனே சென்று, கற்பகவிருக்ஷநிழலில் வீற்றிருக்கும் ஸர்வோத்க்ருஷ்டனாகிற ஸ்ரீஹரிபரந்தாமனை வலம்வந்து பணிந்து மனோவாக்கு காயங்களைத் தங்கள் வசப்படுத்தி, ஓ! ஆதி நடு முடிவில்லாத ஆதிபுருஷனை ஸர்வஸ்வரூபியே! ப்ராவைகர்த்திகள் தங்கள் உத்தமஞானத்தினால் ஆஸ்ரயிக்கத்தக்க, அஷ்டாக்ஷரப்பிரதிபாதியனான ஸ்ரீவாசுதேவனே! ஓ எங்கள் ஆராவமுதமே! உமக்குத் தெண்டன் சமர்ப்பிக்கின்றோம்; என்று வெகுவிதமாய் அந்தரங்கபக்தியாய ஆனந்தாதிசயத்தோடு துதித்துத் தங்களைமறந்து சித்திரதீபம்போலசையாமல் நிற்க ஸ்ரீஎம்பெருமான் அவர்களை குளிரக்கடாக்ஷித்து; ஓ! ரிஷிகளே? தேவர்களே? உங்களுக்கு உற்றதியாது? என்னிடத்தில் என்னபெறக்கருதி யிவணவந்தீர்களோ அதைச் சொல்லுங்களென்றும், இனியுங்கள் மனோசஞ்சலங்களை வெல்லுங்களென்றும் அருளிச்செய்யவே, சகலரும் அளவிலாச் சந்தோஷ பரிதர்களாய் அலர்ந்த தங்கள் திவ்விய நேத்திர பங்கஜங்களில் நின்

ரூபதன்மாத்திரை ராஜஸவியஷ்டியிலுண்டானது பாதேந்திரியம். இவைவைந்தும் ரூபதன்மாத்திரையிலுண்டானவைகள்.

ரஸதன்மாத்திரை யென்பது விஷயம்.-ரஸதன்மாத்திரை-ஸாத்துவீகஸமஷ்டியிலுண்டானது சித்தம். ரஸதன்மாத்திரை - ராஜஸ ஸமஷ்டியிலுண்டானது அபானவாயு. ரஸதன்மாத்திரை - ஸாத்துவீக வியஷ்டியிலுண்டானது ஜிஹ்வேந்திரியம். ரஸதன்மாத்திரை-ராஜஸவியஷ்டியிலுண்டானது குய்யேந்திரியம் இவைவைந்தும் ரஸதன்மாத்திரையிலுண்டானவைகள்.

கந்ததன்மாத்திரை யென்பது விஷயம். கந்ததன்மாத்திரை-ஸாத்துவீகஸமஷ்டியிலுண்டானது அகங்காரம். கந்ததன்மாத்திரை-ராஜஸ ஸமஷ்டியிலுண்டானது பிராணவாயு. கந்ததன்மாத்திரை - ஸாத்துவீக வியஷ்டியிலுண்டானது கிராணேந்திரியம். கந்ததன்மாத்திரை - ராஜஸவியஷ்டியிலுண்டானது பாயுரு. இவைவைந்தும் கந்ததன்மாத்திரையிலுண்டானவைகள்.

இப்படிக்கி வாக்கு-பாதம்-பாணி-குய்யம்-பாயுரு எனப்படுகிற கர்மேந்திரியங்களைந்தும், ஸ்ரோத்திரம்-தொக்கு-சக்ஷு--சிஹ்வை-ஆக்கிராணம் எனப்படுகிற ஞானேந்திரியங்களைந்தும், சப்த-ஸ்பரிச-ரூப-ரஸ - கந்தம் எனப்படுகிற இவை ஐந்தும், பிராண-அபான - உதான-வியான-சமானன் இவை ஐந்தும், மனம்-புத்தி-சித்தம்-அகங்காரம், இவை நான்கும், இவைகள் இருபத்திநாலு தத்துவங்களும் சேர்ந்து கூடியது க்ஷேத்திரம். இதற்கு ஆதாரமாய்க் கட்டியிருக்கிறது இந்த சரீரம். இப்படிக்கொத்த சரீரமில்லாவிட்டால் ஆத்மாத்பண்டிதருக்கு இருப்பிடம் ஏது? சுவதந்த்ரமேது? அவருக்கு இதில் யாதொரு பாத்தியமுமில்லையென்று எனக்குத் தெரியும்.

6-வது சாக்ஷி குடிமயக்கக்கோனை.

கே.—நீ எந்தவூர்?

வி.—நானிருப்பது நிஷேதமங்கலம்.

கே.—உன் பெயரென்ன?

வி.—என் பெயர் குடிமயக்கக்கோனை.

கே.—உறுதியாய்ச் சொல்லு?

வி.—உறுதியாகவே சொல்லுகிறேன்.

கே.—இந்த விஷயத்திலே தெரிந்ததை ஒவ்வொன்றும் விவரமாய்ச் சொல்லு?

வி.—இந்த பஞ்சீகிருத பஞ்சமகா பூதங்களுள் தத்துவங்கள் 96-ம் ஸ்தூலசரீர சூக்ஷுமசரீரமாய்த் தோன்றி தத்துவங்களாகிய ஒவ்வொருவருடைய அதியாசசரிய கர்பிதங்களினால் பலவர்ணங்களாயும், பல நாமங்களாயும், பல செய்கைகளாயும் காட்டும் அப்பியாச கிரத்தியாதிகள் யாதெனில்:—

தைசசனென்றும், பிராதிபாசகனென்றும், ஸ்வப்பன கர்பிதனென்றும், அபிமானமும், கண்டஸ்தானமும், ஸ்வப்பனவஸ்தையும், சுவேச்சாபோகமும், உகாரமாத்திரையும், ஸாத்துவீக இராஜஸ-தாமஸ-குணமும், இச்சாசக்தியும், பிராணமயம்-மனோமயகோசம், இவைகளிருந்துகொண்டு நான் பேசுகிறவன் ஊமையனென்றும், நான் கொடுக்கிறவன் கையில்லாதவனென்றும், நான் நடக்கிறவன் முடவனென்றும், நான் சிறுநீர் விடுகிறவன் மலவிஸர்ஜனை பண்ணுகிறவனென்றும், ஆகிய வாக்காதிகர்மேந்திரியங்களுடைய அத்தியாசங்களும், பின் நான் வைதிகன், நான் லௌகிகன் என்ற சப்தபோதனங்களும், சீதளம்-உஷ்ணம்-மிருது-கடினமென்ற ஸ்பரிசபேதனங்களும், தித்தித்தல்-புளித்தல்-கசத்தல்-துவர்த்தல்-காறுதலாகிய ருசிபேதனங்களும், நறுகந்தம்-துற்கந்தம்-சுகந்தமாகிய கந்தபேதனங்களும், இப்படிக்கிசப்தாதி பஞ்சவிஷயங்களுடைய அத்தியாசங்களும், நான் கேழுகிறேன் செவிடனென்றும், நான் பார்வையுடையவன் குருடனென்றும், நான் ருசி அறிகிறவன் அரோசிகனென்றும், இப்படிக்கி ஞானேந்திரியங்களுடைய அத்தியாசங்களும், நான் பசி தீபனமுடையவன் பசி இல்லாதவனென்றும், நான் தாகமுடையவன் தாகமில்லாதவனென்றும், நான் சக்தியுள்ளவன் பலமில்லாதவனென்றும், நான் வீரமுடையவன் வீரமில்லாதவனென்றும், நான் தும்முகிறவன், நான் இருமுகிறவன், நான் விக்கலெடுக்கிறவன், நான் கண்ணிமையை மூடிமூடி திறக்கச்செய்கிறவனென்றும் நான்யோகி, நான் அடவாதி, நான் ஆகாசகமனம் பண்ணு

கிறவன், இப்படிக்கு சொல்லப்பட்ட தசவாயுக்களுடைய அத்தி யாசங்களும், நான ஸங்கறபவான்-நான் விகறபவான் நான் புத்தி மான-நான யோஜனையுடையவன்-நான் அகஙகாரி-நான் கோப முடையவன-நான ஸம்சியன-நான நிசசயன, இப்படிக்கு அந்தக் காணங்களுடைய அததியாசஙகளும, நான் வைராக்கியன்-நான் பொறுமையுள்ளவன் இவை ஸாததுவிகுண அத்தியாசங்க ளும்,காமம-குரோதமஇது ராஜஸகுணஅத்தியாசங்களும,சோம் பல-நித்திரை இது தாமசகுண அததியாசங்களும், வர்ணபிரமை ஆசிரமபிரமை - சரியை - கிரியை - யோக முதலாகிய ஆடம்பர-பிரமை-மநதிரபிரமை-தநதிரபிரமை - மூர்ததிபிரமை தீாததபிர மை தைவபிரமை-நவகிரக திதிவார-நக்ஷததிர - யோகவிரத உப வாச தெய்வ புண்ணிய-ஸதோத்திரம-காலதேச கிாத்தி இகபர லோக சவுக்கிய பிரமைகள் முதலிய அததியாச பிரமைகள் முத லியவைகள் சூக்ஷமதேகததிலடங்கியிருக்கிற இநத சரீரததுக்கு அழிவேது! இது அழிநதால் இநத ஆத்மநாதபண்டிதருககு இருபபிடமேது! தனக்கு பாததியமென்று சொல்வதெப்படி! யாதொருபாததியமும அவருககிலலை. இநத எதிரிகளுககே சகல ஸ்வதநதிரமென்றே எனக்குததெரியும.

7-வது சாக்ஷி அபான சோவைகாரன்

கே.—நீ எநதவூர.

வி—நானிருப்பது கீழையூா

கே—உன் பெயரென்ன.

வி.—என பெயா அபானசோவைகாரன.

கே.—இநத நமபா விஷயமாய் உனக்குததெரிந்த அம்சங் களை விவரிததுசசொலலு.

வி.—நான் இதில் எலலாவிஷயங்களும செம்மையாய்த தெரிநதவன். இந்த எதிரிகளுளபடஸருவதததுவஙகளும அடங் கிய இந்த சரீரமானகோட்டையின ஒனபதுவாசலுக்கும அடிக் கோட்டை வாயலில் காததிருக்கும சிபாய்நானே. எனக்குஇதின விஷயமாய்த்தெரிந்ததை வாய மொழியானருசுவேயெகூட இதில் காட்டிய பிரத்தியக்ஷ திருஷ்டாந்த படததோடும் ஒவ்வொன் றாய் விவரிக்கிறேன். அதாவது:—

1-வது தூல தேகபஞ்சீகரண படம்.

பஞ்சபூதங்களின் விவரம்.	பிருதிவி அம்சம்.	அப்பு அம்சம்.	அக்கினி அம்சம்.	வாயு அம்சம்.	ஆகாய அம்சம்.
பிருதிவியின்கூறு.	அஸ்தி	மாம்சம்.	தோல்.	நரம்பு.	ரோமம்.
அப்புவின்கூறு.	வாய்நீர்.	மூத்திரம்.	வியர்வை.	ரத்தம்.	சுக்கிலம்
அக்கினியின்கூறு	பசி.	தாகம்.	நித்திரை.	சோம்பல்.	சங்கமம்.
வாயுவின்கூறு.	படுத்தல்.	நடத்தல்.	கிடத்தல்.	ஓடல்.	தாண்டல்.
ஆகாயத்தின்கூறு.	ராகம்.	துவேஷம்	பயம்.	லச்சை.	மோகம்.

இப்படிக்கு ஒவ்வொரு பூதமும் ஐந்து பிரிவாக சரீரத்திலிருந்து கொண்டு அவரவர்களின் தொழில்களை இடைவிடாமல் நடத்திக்கொண்டு வருகிறார்கள். இதானது ஸ்தூல தேகபஞ்சீகரணம்.

சூக்ஷ்ம சரீர பஞ்சீகரண படம்.

முக்குணங்களின் விவரம்		சப்தத்தன் மாத்திரை.	ஸ்பரிசத்தன் மாத்திரை.	ரூபத்தன் மாத்திரை.	ரசத்தன் மாத்திரை	கந்தத்தன் மாத்திரை.	பஞ்சீகரண ரூபங்கள்.
விஷயம்.	வியஷ்டி	சப்தம்	பரிசம்.	ரூபம்	ரஸம்	கந்தம்	இது விஷயபஞ்சகம்
ஸாத்விகாம்சம்	சமஷ்டி	ஞானம்	மனம்	புத்தி.	சித்தம்	அகங்காரம்.	இது அந்தக்கரண பஞ்சகம்.
ராஜஸதாமசம்.	சமஷ்டி.	சமானவாயு	வியானவாயு.	உதானவாயு	அபானவாயு	பிராணவாயு	இது வாயு பஞ்சகம்
சாத்விகாம்சம்.	வியஷ்டி.	ச்ரோத்திரம்	தொக்கு	சக்ஷு	சிங்குவை	ஆக்கிராணம்	இது ஞானேந்திரிய பஞ்சகம்.
ராஜஸதாமசம்.	வியஷ்டி	வாக்கு.	பாணி.	பாதம்.	குய்யம்.	உபஸ்தம்.	இது கர்மேந்திரிய பஞ்சகம்.

இப்படிக்கிருந்துகொண்டு அவரவர்களின் தொழில்களை இடைவிடாமல் பந்தோபஸ்தாய் சூக்ஷ்மதேக அப்பியாசியாய் நடத்திவருகிறார்கள். இது சூக்ஷ்மதேக பஞ்சீகரணம்.

இந்த தூலசூக்ஷ்ம சரீரத்திலடங்கிய பூதாம்சம் கருவி அவயவம் ஸ்தானம் இதுகளைககாட்டிய சக்கரம்.

பூதம.	அம்சம.	கருவி	அவயவம்	ஸதானம.
பிரதிவியில்	பிரதிவி அப்பு தேயு வாயு ஆகாசம்	அஸதி மாமசம தோல நரமபு ரோமம	குதேநதரியம கநதம ஆககிராணம பிராணவாயு அகஙகாரம	குதம் தனமாததிரை நாசிநுனி ஹிருதயம ஹிருதயம்
அப்புவில்	பிரதிவி அபபு தேயு வாயு ஆகாசம்	வாயநீர மூததிரம் வியாவை உதிரம சுககிலம	குஹயேநதிரிய ரஸம [ம ஜிஹவை அபானவாயு சிததம	குயயம தன்மாததிரை ஜிஹவேநதிரி குதம் [யம் நாபி
தேயுவில்	பிரதிவி அபபு தேயு வாயு ஆகாசம	பசி தாகம் நிததிரை சோமபல சஙகமம	பாதேநதிரியம ரூபம [யம நேததிரேநதிரி உதானவாயு புதத்தி	பாதம தன்மாததிரை நேத்திரம் கணடம நேததிரம
வாயுவில	பிரதிவி அபபு தேயு வாயு ஆகாசம	படுத்தல நடததல் உடகாரல ஓடல் தாணடல	பாணீநதிரியம ஸபரிசம [யம தொககேநதிரி வியானவாயு மனம	பாணி தனமாததிரை தொககு ஸர்வசரீரம கணடம
ஆகாசததில்	பிரதிவி அபபு தேயு வாயு ஆகாசம	ராகம் துவேஷம பயம லசசை மோகம	வாககேநதிரியம சபததனமாததி சுரோததி [ரை ரேநதிரியம சமானவாயு ஞானம	வாககு தனமாததிரை சுரோத்திரம நாபி புருவமததியம

இவ்வளவு அடங்கிய கோட்டையின் தலைமையான காவற்காரனாகிய என்னுடைய இருப்பிடத்திற்குச் சமீபமாகத்தான் மூலக்குளம் கிராமம்; அதற்கடுத்த எல்லை சுவாதிஷ்டானபுரம்; அதற்குமடுத்தது மணிபூரகமங்கலம், அதற்குமேலபுரம் அனாகதப்பட்டி, அதற்குமடுத்தாற்போலவே விசுத்திநல்லூர்; அதற்கும் சமீபந்தான் ஆக்ஞைக்குடி. இந்தக்கிராமங்களை வாதி ஆத்மநாதபண்டிதரானவர் அனுபவிப்பதாகச் சொல்வதை நான் ஒருபோதும் பார்த்ததே இல்லை. அவர் இன்ன அடையாளமுள்ளவரென்றும் எனக்குத் தெரியாது. அவர் சிகப்பா அல்லது கருப்பு நிறமுள்ளவரா? இரண்டுங்கலந்தமாநிறமா? வெண்மை நிறமா? பொன்மை வர்ணமா? நீல வர்ணமா? பச்சை வர்ணமா? அவர் குள்ளமாயிருப்பாரா அல்லது நெடியரா? குறுகாகமடைந்திருப்பவரா? அவருடைய அங்கம் - கை - கால் - முகம் நேத்திரம்-வாய் நாசி இன்ன விதமான அவயவரூபங்களை உடைத்தானவரென்றும் நானறியேன். எப்போதுமே அவரை நான் பார்த்ததே இல்லை. அப்படிக்கு அவர் தனக்குச் சுதந்தரமென்று வாதாடுவது அபாண்டமான பொய்தான். நான் எப்படிக்கொத்தவனென்றால், இந்தசரீரத்துக்கு பஞ்சமகாபூதங்களிலே பிரதானமாயுள்ள திலோனாகிய ராஜஸதாமச-ஸாத்வ மாத்திரை-ஸமஷ்டியில் நானாகவே தோன்றிய அபானன். நான் வெகு தீர புருஷன். மகா பெரியன். இந்தக்கோட்டை வாசலை வெகு பந்தோபஸ்தாக இராத்திரி பகலென்று பாராமல் பிடித்த துப்பாக்கியுடன் வெகுஜாக்கிரதையோடு காத்திருப்பவன். இந்தக்கோட்டையிலடங்கிய தத்துவங்களான என்னை நீக்கி மற்ற 95 பேர்களும் என்பெயரைச்சொன்னால் பிரக்ஞைதப்பி பெருமூச்சுவிட்டுதிக்கலடைந்து தடுத்த தடுமாறி ஒருவர் பேரிலொருவர் விழுந்து சாவார்கள். நானிந்தக் கோட்டையை அழித்து விடவேணுமென்று நினைத்தால் ஒரு நிமிஷப்பொழுதில் அழித்துவிடுவேன். காக்கவேணுமென்று தோற்றினால் நானே காத்து ரக்ஷிப்பேன். ஆகையால் சிருஷ்டி என்ன? ஸ்திதி என்ன? ஸம்ஹாரமென்ன? இவைகளுக்கு கர்த்தா நானே தவிர எனக்குப்பெரியவன் இதில்யாருமில்லை. ஸகல ஜீவசரீரிகளும் என்னையே கொண்டாடி வணங்குவார்கள். ராஜாவானாலும், ராஜாத்தியானாலும்,

சகல ஜனங்களும் கைகட்டி வாய்பொத்தி கிறகசெய்கிற பரம ஜகத்குருவானாலும் காலையில் தூங்கியெழுந்திருந்ததும், என்னைக்கண்டு தெரிசித்து தலைகுனிந்து வணங்கிப்போகாவிடில் அப தத்துவகெடுதியுமே நேரிடும். அவ்வளவு ஸாமாத்தியசாலியாயும் தீரபுருஷனுமிருக்கிற என்னைக்கடந்துபோய், இந்த ஆத்மநாத பண்டிதா அனுபவிப்பதாகச் சொல்வது சுத்த அபாண்டமான பொய்யென்றே நான் உறுதியாய்ச் சொல்லுகிறேன்.

8-வது சாக்ஷி சோரநாதநாவிதன்.

கே.—நீ எந்தவூர்?

வி.—நானிருப்பது சூதபுரம்.

கே.—உன் பெயரென்ன?

வி.—சோரநாதனாவிதனென்று பெயர்.

கே.—பிரமாணமாகச் சொல்லு?

வி.—பிரமாணமாகச் சொல்லுகிறேன்.

கே.—இந்த நம்பர் விஷயத்தில் தெரிந்ததை விவரத்துடன் சொல்லு?

வி.—பஞ்சீகிருத பஞ்சமகாபூதங்களடங்கிய ஸ்தூலசூக்ஷும சரீரத்தில் வாயுக்கள் 10. அடங்கியிருக்கிறது. அதாவது-பிராணன் - அபானன் - வியானன் - உதானன்- சமானன்-நாகன்-கூர்மன்-கிருகரன்-தேவதத்தன்-தனஞ்சயன். இப்போபட்ட பிராணவாயுவானது ஆத்மாவை விட்டு நீங்காதிருக்குந்தன்மையைப் பெற்றபடியால் பிராணவாயுவென்று பெயர் வந்தது. இந்த வாயுவானது லலாடமத்தியிற்றோன்றி, மூலாதாரகுண்டலியில் குதித்து நாபி ஸ்தானத்தில் முட்டி இடைபிங்கலைகளிலோடி கபாலத்தைச்சுற்றி நாசியின் வழியாய் பனிரண்டங்குலம் புறப்பட்டு நாலங்குலம் கழண்டு, மற்ற எட்டங்குலமும் திருப்பஸ்தானத்திலிருந்தியிடத்திற்குச்சென்று தாக்கும். இந்த பிராணவாயுவுக்கு வருவதும் போவதுமான இதே தொழிலாய், நாழிகையொன்றுக்கு 360 சுவாசமாக, இரவும் பகலுங்கூடிய நாழிகை 60-க்கும் நாளொன்றுக்கு; 21,600 நடை நடக்கும்.

இதற்கு விவரமாவது:—

மூலாதாரககரிமுகனுக்கும் குண்டலி சத்திக்கும்	600	சுவாசம்.
சுவாதிஸ்டானததில பிரம்மனுக்கு	6000	,,
மணிபூரகததில திருமாலுக்கு	6000	,,
அநாகததில் ருததிரனுக்கு	6000	,,
விசுததியில மகேசுவரனுககு	1000	,,
ஆக்கினையில சதாசிவனுககு	1000	,,
பிரம்மரந்திரததில சிறசபைககு	1000	,,

ஆகமொததம் சுவாசம 21,600.

பஞ்சபூதம் வசிக்குமிடம்.

சுவாதிஷடானததில வசிககும் பூதம	பிரதிவி.
மணிபூரகததில வசிககும் பூதம	அபபு.
அநாகததில வசிக்கும் பூதம	தேயு.
விசுததியில வசிக்கும பூதம	வாயு.
ஆக்கினையில் வசிக்கும பூதம	ஆகாயம

பிராணவாயுவின தொழிலாவது.—

பிராணவாயுவானது இரக்தபபையிலிருக்கும அசுததமான காரிரக்தததைச சுததியாககி, பெருநாடி சிறுநாடி முதலிய நரமபுகளுக்கெலலாம இரகதததைப் பரவசசெய்து உடலை வளாத்து இந்திரியங்களையெல்லாம முயங்கவைகக (விாததியாகக) ஆதாரமாயிருக்கும இநத வாயுவின ஆதாரததாலேயே, இநதிரியஙகள் அதிக விரைவாய குதிரையைபபோல சென்று விஷயஙகளைப பொருநதச செயயும.

இநதிரியஙகளெனபது.—வாய - கால் - கை- அபானம- குறி இவைகளாம்.

இவ்விந்திரியஙகளானது, பிராணவாயுவின ஆதாரமின்றி தானுய்சசெலலமாட்டாது. அநத பிராணவாயுவானது, இடது நாசியிலோடும்போது சநதிரகலையெனறும, வலது நாசியிலோடும போது சூரியகலையென்றும பெயா.

அபானவாயுவின் தொழில் —

அபானவாயுவானது, அன்னரஸத்தை உடலில் நிறுத்தி, உந்திகமலத்தின் கீழேநின்று மலமூத்திரத்தைப் பிரித்து குதத்தின் வழியாக மலத்தையும், குய்யத்தின் வழியாக ஜலத்தையுங் கழித்து, அந்தந்தத்துவாரங்களை குறிக்கிக்கொள்ளும். இந்தவாயுவின் நிறமானது பசசை என்று சொல்லப்படும்.

வியானவாயுவின் தொழில் —

வியானவாயுவானது, உணவின் சாரங்களை சகலமான நாடி நரம்புகளுக்கெல்லாமூட்டி, சரீரத்தையும், இந்திரியங்களையும், பலப்படுத்தி அவைகளின் தொழில்களை நடத்தி, அவயவங்களை நீட்டவும் முடக்கவும் செய்து, பசி-தாகம் சோபதாபத்தை உண்டாக்கும். இதின் நிறம் வெண்மையாயிருக்கும்.

சமானவாயுவின் தொழில் —

சமானவாயுவானது, நாபிஸ்தானத்திலிருந்து அன்னரஸத்தை பாதாதிகேசமட்டிலுமுள்ள ரோமத்துவாரங்கடோறும் பரவச்செய்து, சரீரத்தை புஷ்டியாக்கும், ஜடராக்கினியோடுகூடி உணவுகளை சமனம்பண்ணிக்கொண்டிருக்கும். இதின் நிறம் நீலம்.

உதானவாயுவின் தொழில்:—

உதானவாயுவானது, அன்னத்தாலுண்டான சாரத்தைநிறுத்தவேண்டியவிடத்தில் நிறுத்தி, நித்திரைவருங்காலங்களில், வாய கால்-கை குறிமுதலிய இந்திரியங்களை ஒடுங்கச்செய்யும். தானமாத்திரம் கண்டஸ்தானத்தில் நின்று கனவுகாண்பிக்கும். திரும்பவிழிக்கச்செய்யும் மரணகாலம் வந்தபோது இந்திரிய சத்துக்களையெல்லாம் கிரஹித்துக்கொண்டு வெளிப்பட்டுவிடும். இந்த உதானவாயுவின் நிறம் இளமின்னலையொத்திருக்கும்

இவ்வைந்து வாயுக்களும் பிராணுதிபஞ்சகமெனப்பெயர்.

உபவாயுக்களின் பெயரும் தொழிலும்.—

நாகனென்னும் வாயுவானது, சுவாசக்குழியின் வழியாய் நின்று, விக்கல்-கக்கல்-ஏப்பம்-கொட்டாவி-சோம்பல் இவைகளையுண்டாக்கும்.

கூர்மனென்னும் வாயுவானது, கபாலஸ்தானத்திலிருந்து விழிகளை நோக்கி, கண்ணினது நிமைகளை இமிட்டவும், மூடவும், திறக்கவும் செய்யும். சரீரபலத்துக்கோர் ஆதாரமாயிருக்கும்.

தேவதத்தனென்ற வாயுவானது, குறிகளினிடமாக நின்று அவைகளை பூரிக்கச்செய்து, சந்தோஷமும், நகைப்பும், மனமகிழ்ச்சியும், இன்பத்தையும், ஆநந்தத்தையுமுண்டாக்கும்.

தனஞ்செயனென்றவாயுவானது, கபாலத்தில்நின்று எல்லா வாயுக்களுக்கும் அதிக மேன்பாடுள்ளதாயும், உடலை உலாவச் செய்வதாயுமிருக்கும். தேகத்தைவிட்டு ஆத்மா பிரிந்தவுடன், உடலை வீங்கவும் பாரிக்கவுஞ்செய்து, துர்க்கந்தமுண்டாக்கி, கபாலத்தைப்பிளந்துகொண்டு வெளியுடன் கலந்துபோகும்.

இன்னமும் வாதி ஆத்மாநந்தபண்டிதர் தனக்குச்சொந்தமென்று சொல்லுகிற மூலாதாரமென்ற மூலக்குளம் கிராமத்தின் விவரங்களை விவரிக்கிறேன்.

1-வது மூலாதாரம்.



மூலாதாரமென்பது, காலெலும்புகளிரண்டும் கூடுமிடம் குய்யமாம். குய்யத்திற்கும் குதத்திற்கும் நடுவில் குண்டலி ஸ்தானமாகிய, மூலாதாரயிடத்தில் அண்டவடிவாகியும், அந்த வடிவத்திற்குள் முக்கோணமாய், முக்கோணத்தின்நடுவில் நாலிதழுடைய ஒரு புஷ்பவட்டமாய், அந்தப் புஷ்பத்தின் நடுவில “அகாரம் உகார” மிருக்கும். “அகாரத்தின்” மீதில் கெணபதியும், “உகாரத்தின்” மீதில் வல்லபையும், எழுந்தருளியிருப்பார்கள

குண்டலி வட்டத்திற்குறும் நான்கெழுத்தும நான்கிதழென்ற றிக. அதுவே அபானவாயுஸ்தானம.

இந்த மூலாதாரத்திற்குமேல, நாலங்குலம உயர்ந்தஸ்தானத்தில் ஸ்வாதிஷ்டானமாம.

2-வது ஸ்வாதிஷ்ட்டானம்.



ஸவாதிஷ்டானமென்பது, முன்னுரைத்த மூலாதாரத்திற்கு நாலங்குல பிரமாணத்திற்குமேலே விளுத்தண்டின அடியாயும, லிங்கஸ்தானமுமாகிய யிடத்தில நாற்சதுரமாயும, இந்த சதுரத்தினடுவில, ஆறு இதழ்களுடைய ஒரு புஷ்பவட்டமாயும, அந்த புஷ்பத்தின மத்தியில "நங-வங" என்ற பீஜாக்ஷரமிருக்கும. "நங" என்ற அக்ஷரத்தின்மீதில பிரமமாவும, "வங" என்ற அக்ஷரத்தின்மீதில ஸரஸவதியும வீற்றிருப்பார்கள. இதுவே பஞ்சபூதங்களின முதன்மையாகிய பிரதிவிஸ்தானம.

3-வது மணிபூரகம்



மணிபூரகமென்பது, தேகத்திலுள்ள (1008) ஆயிரத்தெட்டு நாடிநரம்புகளும் சூழ எல்லாநாடிகளுக்கும வேருள்ளது

இஃது தொப்புளுக்கு நேரான இடம். இதை உந்திகமலமென்றும் சொல்லப்படும். அவ்விடத்தில் ஏழாம்பிறைக்கிணங்கிய கோணமும் அதற்கு நடுவில "மங்-வங்" என்ற இரண்டு அக்ஷரமிருக்கும். "மங்" மீதில் திருமாலும், "வங" மீதில் லக்ஷ்மியும் எழுந்தருளியிருப்பார்கள் இந்த உந்தி கமலத்திலேயே மகா விஷ்ணுவும், லக்ஷ்மியும் வீற்றிருக்கும் ஸ்தானமென்று சொல்லப்படும். இதுதான் அப்பு-பூதஸ்தானம்.

4-வது அனாகதம்.

அனாகதமென்பது, முன்னுரைத்த மணிபூரகத்திற்கு எட்டங்குலம் மேலே ஹிருதயகமலமே அனாகதமென்னுமிடமாம். அந்த ஹிருதய கமலமே தேயு ஸ்தானமாகும். அந்த தேயு ஸ்தானத்திற்கு மத்தியில் முக்கோணமிருக்கும். முக்கோணத்தி னடுவில்பன்னிரண்டிதழுடையபுஷ்பவட்டமாயிருக்கும். அந்த புஷ்பத்தினடுவில் "சிங-ரங" என இரண்டு அக்ஷரமிருக்கும். "சிங்" மீதில் ருத்திரனும், "ரங" மீதில் பார்வதியும் வீற்றிருப்பார்கள். இந்த ஹிருதயஸ்தானமே கழுத்தின் ஸ்தானமாயும், அக்கினி மிரமாயுமிருக்கிற 12 இதழுள்ள ஷை அக்ஷரங்களை முக்கோணத்தில் காண்க. இதுவே பஞ்சபூதங்களிலொன்றாகிய தேயுஸ்தானம்.

5-வது விசுத்தி.



விசுத்தி என்பது, முன்னுரைத்த அநாகதத்திற்கு பத்து விரக்கடைக்கு மேலேயுள்ள இடமாம். இது கண்டஸ்தானமாயும், அதுவே வாயுஸ்தானமாயுமிருக்கின்றது. அந்த வாயு ஸ்தானத்தின் மத்தியில் அறுகோணமாயும், அறுகோணத்தினடுவில் பதினாறு இதழுடைய ஒரு புஷ்பவட்டமாயும், அந்த புஷ்பத்தினடுவில் "வங-யங" என்ற இரண்டு அக்ஷரமிருக்கும். "வங" மீதில் மஹேஸ்வரனும், "யங" மீதில் மஹேஸ்வரியும் எழுந்தருளியிருப்பார்கள் இதுவே வாயுஸ்தானமென்றறியவும்.

6-வது ஆக்ஞை



ஆக்ஞை என்பது, முன்னுரைத்த விசுத்திஸ்தானமாகிய கண்டத்திற்கு பன்னிரண்டு விரக்கடைக்கு மேற்பட்ட இடமாம். இது முதுகடையாய் ஓங்கி எழுந்து நின்று வீணாத்தண்டின் முடிவாகியும், நெற்றி இரு புருவத்தின் மத்தியஸ்தானத்திற்கு மேற்பட்ட பெருவெளியில் பொன்போன்ற பிரகாசமுற்றிருக்

கும். புருவ வெளியாகிய ஆகாயஸ்தானத்தில் பிறைபோன்ற வடிவாகியும், அந்த பிறையின் மத்தியில் "யங் க்ஷங்" என்ற இரண்டு அக்ஷரமிருக்கும். "யங்" மீதில் சதாசிவனும் "க்ஷங்" மீதில் மனோன்மணியும் வீற்றிருப்பார்கள். இதுவே ஆகாசபூதஸ்தானமென்றறியவும்.

ஆத்மாவுக்கு ஆதாரமானது இந்த சரீரகருவிகளில் எவையெனில், வலதுசரம்-இடதுசரம்-நாபி-கண்-மூக்கு-செவி-உச்சி-இந்த எழிடங்களிலும் ஆத்மாவானவர், ஒன்றைவிட்டு ஒன்றில் மாறி மாறி வியாபித்திருப்பதற்கு ஸ்தூலமாகிய உடம்பையே மார்க்கமாகக்கொண்டு உலாவிவருகின்றது.

பின்னும் ஸ்தூலசரீரத்தில் உற்பத்தி யாதெனில்:—

புருடனும்-ஸ்திரீயும் கலவியிற்சேருமிடத்தில் புருடன் வஸ்துவாகிய சுக்கிலம் அதிகமாயின் ஆண் சிசுத்தரிக்கும். பெண் வஸ்துவாகிய சுரோணிதம் அதிகமாயின் பெண் சிசுத்தரிக்கும். சுக்கிலமும் சுரோணிதமும் ஏறக்குறைவின்றி சமமாய் நிலைக்குமாயின் ஆண் பெண்ணல்லாத அலியாய்த்தரிக்கும் கருக்குழியினிடமாய் சுக்கிலமும் சுரோணிதமுமிசரமாகும்போது பிராணவாயு மோதி இரண்டாய்ப்பிளக்குமாயின் இரட்டைப்பிள்ளையாய்ப்பிறக்கும். சுக்கிலமும் சுரோணிதமும் சரமாகுமுன் பிராணவாயு தாக்கப்பிரிக்குமாயின் ஆண் ஒன்று பெண் ஒன்றுமாயுதிக்கும். இன்னமுமொருவிதமுண்டு அதாவது, புருடனும் பாரியாளுங்கூடி உறவாய நாதவிந்து கருக்குழியிலுதிக்கும்போது, சுவாசமானது இடகலையில் மோதினால் பெண்ணாகும். பிங்கலையில் மோதினால் ஆணாகும். இருகலையும் சமமாய் சுழிமுனையோடினால் பெண்ணுமாணுமாக இரட்டைப்பிள்ளையாகும். சூரியகலை ஓடும்போது வாயு சேர்ந்தால் இரண்டும் ஆணாய்ப்பிறக்கும் சந்திரகலையோடும்போது வாயு சேர்ந்தால் இரண்டும் பெண்ணாய்ப்பிறக்கும். புருடனும் ஸ்திரீயும் புணரும்போது வாதநாடி கதித்து ஓடினால் வாததேகியாகவும், பித்தநாடிகதித்து ஓடினால் பித்ததேகியாயும், சிலேத்துமநாடி கதித்து ஓடினால் சிலேத்துமதேகியாகவும் சிசுவுதிக்கும்.

உரு அமையும் விவரம்:—

ஸ்திரீயும் புருடனும் சேர்ந்து உறவாடும்போது சித்தமழிந்து சிதறியோடும் நாதமானது கருக்குழியில் தோயும்போது, ஜீவனானது பொருந்தி அவரவர்கள் செய்யும் காமவினைக்கேற்க அவளால் தாங்குதல் பெற்ற ஒரு கணப்பொழுதில் இரண்டு திரிசரேணுக்கொண்ட பருமனாகும். ஒரு நாழிகைப்பொழுதில் ஒரு பேனளவு வடிவாகும். இப்படியே ஏறி ஏறி ஒரு தினத்தில் ஒரு குண்டுமணிபோல திரண்டவுருவாகும். ஐந்து தினத்தில் நீர்க்குமிழிபோலாகும். ஏழு தினத்தில் இளம் ஊனையத் திரளும். பதினைந்து தினத்தில் செந்நீராதம் 25 தினத்தில் பீஜம் சற்றுத் தோற்றமாகும். மாதம் ஒன்றில், சிரசு-கண்டம் பிடரி-முதுகெலும்பு இவை பிரிவினையாய்க் காட்டும். இரண்டு திங்களில், கரம்-பாதம்--உள்ளங்கால்--விலாப்புறம் இவை உரு அமையும். மூன்றாந் திங்களில், ஒன்றோடொன்று ஒட்டும் தலைகள் பொருந்தும். நாலாந் திங்களில், விரல்-முகம்-நாசி-கன்னம் விவரமாயத் தோற்றும். ஐந்தாந்திங்களில், குய்யம்-விரல் கட்டோறும் நகம்-ஏறு இவைகளமையும் ஆறாந்திங்களில், காது துவாரம் அமையும். ஏழாந்திங்களில், உபத்தம் அல்லது லிங்கம் அமையும். அத்துடன் தொப்புள் குதம் இந்தத் துவாரங்களமையும். எட்டாந்திங்களில், கபாலப்பரப்பில் ரோமங்களும், மற்ற அவயவங்களும், பிராணாதி பஞ்சகமென்ற வாயுக்களும், நீக்கமாயப் பொருந்தும்.

மாதா புசிக்கும் அன்னபானாதிகளின் சாரமானது, சேற்பத்திலிருக்கும் சிசுவின் சிரோத்துவாரத்தின் வழியாய் வயற்றிற் சென்று சிசுவை போஷித்து உடலை வளரச்செய்யும். அன்ன சாரமானது சிசுவின் வயற்றில் பொருந்தத் துவக்கியது முதல் மனம்-புத்தி-சித்தம்-அகங்காரமென்ற அந்தக்கரண சதுஷ்டயம் முதித்து, அதினால் ஜீவனானது சுகதுக்கங்களை அனுபவித்து, பின்னும் பூர்வ ஜன்மங்களில் செய்த பாபபுண்ணியங்களை தன் புத்தியினிடமாய் சொப்பனம்போல தோன்றியபடியும். மாதா புசிக்கும் அறுசுவைகளில் புளிப்பினால் மசகையும், உப்பினால் எரிம்பும், கைப்பினால் போதையும், துவர்ப்பால் ரத்தமூம் மதுரத்தால் சுக்கிலவு முண்டாகும்

பததாவது திங்கள் பூரணமானவுடன், வியானவாயு என்ற வன் சிசுவினுடலை மடககித தலைகீழாகத தள்ளும். அப்போது சிசுவானது தன பலங்குறுகி மயங்கி ஆலையிலகபபட்ட கருமபு போல் மாதாவின் யோனியெநதிரத்தால நெருககப்பட்டு அதே முகமாய் பூமியை நோக்கிப் பிறக்கும். ஆத்மாவானது இநதத் தேகத்தைதானென்றபிமானிதது இருவினைக்கீடாகஇன்பதுனபங்களை யனுபவிதது முடிவில் இந்த தூலத்தை விழ்ததி வெளி போடி கலக்குமாதலால இநத ஆதமாவுக்கு கதி இந்த சரீரமே யொழிய வேறு கதி இலலை. குந்த இடங்கொடுத்தபடியாலல்லவோ இவ்வளவு வியவகாரம இந்த ஆதமநாதபண்டிதருக்கு. இநத சரீரமழிநதுவிட்டால இவருக்கு வாயேது' வியவகாரமேது' இவருக்கு இநத வியவகாரத்தில் யாதொருபாத்தியமுமில்லை. இதுகள் பிரதிவாதிகளுக்கு பாத்தியமென்றே உறுதியாய்சசொலலுகிறேன.

இனிகோர்டார அபிப்பிராயமாவது:—

எதிரிகள் தரப்பில 1-2-3-4-6-7-8 சாக்ஷிகளை விசாரிக்கப் பட்டது. ஒருவருக்கொருவா விசேஷமாகவே ருஜூகொடுக்கிறார்கள். 5-வது சாக்ஷியாகிய சிதாபாசய்யரானவா இதில் 14-வது சபனிமெணடு பிரதிவாதியாகயிருப்பதாலவரை சாக்ஷியாக இதில விசாரிக்கும படசததில விசாரிதத 7 சாக்ஷிகளுககும மேலாகவே ருஜூகொடுப்பாரென்று நாம நம்புகிறோமாகையால் எதிரிகளின தரப்பு சாக்ஷிகள் போதுமானவைகளென்று கோர்டடாரவாகள அபிப்பிராயம கூறுகிறார்கள்

திவ்ஸ ரைட் என்று வக்கிலும் குந்திரூர்.

இனி கோர்ட்டுத்தரப்பில் அலியென்ற மாயாசத்தியை விசாரிககப்படுகிறது.

கே.—நீ எந்தவூா ?

வி.—நானிருபபது அண்டபிண்ட பிரமாண்ட அகண்ட மண்டலாதிபுரம்.

கே.—உன்பெயரென்ன ?

வி.—என் பெயர் அவி என்றும மாயாசத்தி எனறுமசொல்ல ப்படும்.

கே.—இந்த நமபரில் உனனுடைய பாத்தியத்தை உறுதி யாய் விவரமாகச்சொலலு?

வி.—சகல பிரபஞ்சமும என்னுடையது. அதுவும நானே. சகல ஜீவ கோடிகளும் எனனுடையது. அதுவும் நானே. சகல சப்ராசரஙகளும எனனுடையது. அதுவுமநானே. ஆணும நானே-பெண்ணும் நானே. அவியும நானே இராஜாவுமநானே-இராஜாத்தியும நானே. தகபபனும நானே. பிளளையுமநானே. திருடனும் நானே. திருட்டுககொடுத்தவனும நானே. தெணடிபபவனும் நானே. தெண்டனை அடையபபட்டவனும-நானே சகலமும் நானேயாதலால எனக்கே பாத்தியமெனறு ஸதாபிக்கவேணுமாயக கோருகிறேன்.

கோாட்டாரவாகள கிராஸ்.

கே.—எலலாம உன்னுடையதென்றும் எல்லாம நீயே என றும சொலவதெபபடி? உனககு பாத்தியமில்லாதது ஒனறுமில் லையா?

வி.—இல்லவே இலலை ஆனாலும,

வசனம்.

बहवो गुरवःसंति शिष्यवित्ताप हारकाः ।
दुर्लभोयं गुरुर्देव शिष्यहृत्ताप हारकः ॥ १३ ॥

இதன பொருள:—சிஷியனுடைய பொருளை அபகரிக் கப்பட்ட ஆசான வெகுபேருண்டு. சிஷியனுடைய மனதின் கண்ணுள்ள துன்பத்தைபபறிக்கும்படியான ஆசாரியர் கிடைப்ப தரிது. இப்படிககில்லாமல்,

வசனம்.

मायोपाधि जगद्योनि सर्वचत्वादि लक्षणः !
परोक्षशबळसत्या ध्यात्मैक स्तत्वदाभिघः ॥ १४ ॥

இதன் பொருள் — மாயோபாதிகனும், ஜகத்துக்குக் காரணனும், [illegible] முதலான குணங்களோடுகூடின வனும், பரிபூரண [illegible] மாயையையுமிருக்கிற ஈஸ்வரனே தத்பதார்த்தமாம், என்று இது பிரமாண சித்தமாம்.

பின்னுமிந்த ஓங்காரமென்றும், பிரணவமென்றும், பரிபூரணானந்த நித்தியானந்த நிர்விசேஷானந்த சுவரூபபாவமென கி, விகற்பாதி பேதாபேதமற்ற ஆசாரியரைத் தேடி வணங்கி, அவரால் கிருபை அடைந்தவனைத் தவிர மற்றதுயாவும் எனக்கே சொந்தம். அதுவுமன்றி

வாஸிஷ்ட இராமாயண வசனம்.

एक ब्रह्म चिदाकाश सर्वात्मक मखडित ।
निरतर निराकारमिति भावयराघवा ॥ १५ ॥

இதன் பொருள்—சிதாகாசஸ்வரூபனுகியும், ஸர்வ ஸ்வரூபனுகியும், அகண்டாகாரனுகியும், நிரந்தரமாகியும், நிராகாரமாகியும், ஏகமாகியுமிருக்கிற பிரஹ்மத்தை பரிபாலனம் பண்ணப்பட்டவனைத் தவிர மற்றதுயாவும் எனக்குச் சொந்தம். அதுவுமன்றி பின்னும்—

मनोनबुध्धिर्नशरीरमिंद्रिय तन्मात्र भूतानि न भूतपंचकं ।
अहंकृतिश्चापि चर्चीत्स्वरूप तमीशमात्मान मुपेतिशश्वतं ॥ १२ ॥

இதன் பொருள்:—ஸர்வஸ்வரூபமும், சாசுவதமாயுமிருக்கிற ஆத்மஸ்வரூபத்தை மனதும், புத்தியும், அகங்காரமும், பஞ்சதன்மாத்திரையும், பஞ்சமகாபூதங்களும், சரீரமும் அடையமாட்டாது என்று அறிந்தவனெவனோ அவன் நீங்கலாகவும் இன்னமும்,

अनादि निर्वाच्यतया कारणोपाधि रुच्यते ।
उपाधित्रतया दन्यमात्मा न मपधारयेत् ॥ १७ ॥

இதன் பொருள்:—அநாதியாயும், அநிர்வாச்சியமாயும் காரணோபாதியென்றும் சொல்லப்பட்டது. இம்மூன்று உபாதிகளுக்கும் அன்னியமாய ஆத்மாவை அறியப்பட்டவனெவனோ

पंचभूतमयंविश्व मरीचि जलसंनिभं ।
कसेहा भूत्नमस्कारः पहमेको निरंतरं ॥ १८ ॥

இதன்பொருள.— பஞசபூதஸவரூபமான பிரபஞசம் கானல் ஜலததுககொப்பானதுதானே. நானே எஙகும பரிபூரண மாயிருககிறேன். வேறுயாருககு நமஸகாரமெனறும தனனைத தானேயறிநதவனெவனோ இப்படிககெல்லாம அறிநதவர்களைத தவிர மறறது யாவும நானே அதுகளும எனனுடையதே யெனறு உறுதியாயச சொலலுகிறேன.

கேசு முடிநதது

இனி பிரதிவாதி தரப்பு வக்கீல் அட்ரெஸ்.

இந்த கேசில் நாலே பாயிண்டுகளிருக்கிறது.

1-வது வாதிக்கி தகபபன தாய் இல்லையென்றும, ஏகவய துளளவனெனறும, பெண்டாட்டி பிள்ளைகளில்லையென்றும், ஏகனெனறும் சொலவதால, முனபின யாதொனறும் தெரி யாத ஜன்மமே மைனராயும, மெஜாரட்டி வராதவனாயும, சித்த பிரமைகொண்டவனைபபோல பிதறறுகிறான். இபபடிப்பட்ட மைனர் கொணடுவநத வியவகாரததைப பிடிகக சட்டததில் இட மிலலை. ஒருககால் இநத மைனரை போஷிககப்பட்டவர்களிரு நது வியாஜியஙகொணடு வரபபடவுமிலலை. யாராவது அவனு ககு போஷணைக்காததாயிருபபதாகவும தெரியவிலலை. முதலெடு பபில இநத கேசைபபிடிதது விசாரிககவே யாதொரு ஆதார முமிலலை

2-வது ஆறு கிராமம தனககுச சொநதமென்றும சொல்லு கிறான. அபபடிபபட்ட கிராமம அவனுககு பிதிரார்ச்சிதமா அலலது ஸவயாரஜிதமாயெனபதாக யாதொரு தஸதாவேஜு களுமிலலை. வாதி தரபபில பில 1-முதல 8 சாகஷிகளும சொல்லி வநததில அதறகொததததாக யாதொரு ருஜு அமசஙகளுமில்லை.

இநத வாதி சுதத அஞஞானியாயிருநது பிரதிவாதிகளுககுச சொநதமான சரீர கோட்டையில குடியிருநது காலம தள்ள

இடங்கொடுத்திருக்கக்கூடும். அந்த அம்சங்களைக்கொண்டு தனக்கே பாத்தியமென்று பொய் வியாச்சியம் கொண்டு வந்து வீணான கக்ஷி சொல்லுகிறானேயொழிய வேறில்லை. மேலும் இவன் இன்னவம்ச பரம்பரையிலொட்டினவனென்றும், இன்ன விதமான குணம்சங்களை பொருந்தினவனென்றும, கண்டு பிடிக்கவொருவித ருஜூ பாகங்களுமில்லை. வாதி சுத்த அஞ்ஞியாயும் பாப்பர் நிலைமையிலுள்ளவனுக்கு கிராமங்களை பரிபாலனம் பண்ண எந்த சிப்பந்தி தளவாடங்களைக்கொண்டு பரிபாலனம் செய்யக்கூடும். இந்த அம்சங்களைக் கோர்ட்டார் யோஜிக்க வேண்டியது.

3-வது எதிரிகளுடைய வாக்குமூலத்தைக்கொண்டும், அவர்கள் தரப்பு 1-2-3-4-6-7-8 வரையிலுள்ள 7-சாக்ஷிகளுடைய ருஜூ அம்சங்களைக்கொண்டும, இந்த எதிரிகளுக்கே சகல சுதந்திரமும் பாத்தியமுமிருப்பதாக தெரியவருகிறது. யாதெனில், இவர்கள் 96 சிப்பந்திகளோடும் ஒவ்வொருவர்களும் சுவயம் பிரகாசிகளாயும், சாமர்த்திய பலபராக்கிரமசாலிகளாயுமிருந்து சரீரக்கோட்டையை வெகு பந்தோபஸ்தாய பாதுகாத்து வருகிறபடியால், அதிலடங்கிய 6 கிராமங்களும் அவாகளுக்கே சொந்தமானவைகளென்றும, சகல அம்சங்களும் அவர்களுக்கே இருப்பதாக கொஞ்சங்கூட சலனமன்னியில ஸ்பஷ்டமாய் தெரியவருகிறதாகையால் இந்த பாயிண்டை கோர்ட்டார் முக்கியமாய் கவனிக்கத்தக்கவைகள்.

4-வது அவியென்ற மாயாசக்தியின் பாத்தியமாய் கக்ஷிபேசுகிற சங்கதிகளில் ஒருவிதமான ரிகார்டும சாக்ஷி ருஜூ அம்சங்களுமில்லை. அதை எடுத்துச்சொல்லவேண்டியவைகள் யாதொன்றுமில்லையானதால் கோர்ட்டாரவர்கள நான சொல்லி வந்த ஒவ்வொரு பாயிண்டுகளையும்யோஜித்து, எங்கள் கக்ஷிக்கு உறுதி செய்து வாதியின பிராதைத்தள்ளி எங்கள் செலவு நஷ்டங்களைக் கொடுக்கும்படியாய கோரப்படுகிறது. சித்தம்

வாதி தரப்பு வக்கீல் விவேக தீக்ஷதா அட்ரேஸ்.

இந்த கேசில் எங்கள் தரப்பில் 1-முதல் 8-சாக்ஷிகளை விசாரிக்கப்பட்டு எங்கள் கக்ஷிக்குப் போதுவான ருஜூவாயிருக்கிறது.

பிரதிவாதிகளும அஷ் தரபபு சாக்ஷிகளும் சொல்லிய வாக்கு மூலங்களை யோஜிககு தாங்களே பெரியவர்களென்றும், தங்களுக்கே பாத்தியமென்றும், அவர்கள் தரபபு வக்கீல்கள் பேசுவது எங்கள் பிராதுக்கு ஒத்ததல்ல.

2-வது எங்களுடைய பிராதின் கருத்தும் எங்கள் தரப்பு சாக்ஷிகள் சொல்லிய வாக்குமூலததின் சாராம்சம யாதெனில், ஜன்மம எடுத்தவர் கொப்பஞ ரூபமான விஷய சுகங்களை நீக்கி இனி ஜன்மமெடுக்கவொட்டாமல ஸாதன சதுஷ்டயங்களைச செய்து ஆனநததததை அடைய விருமபியது யாதெனில்.—

चतुष्टयं साधनानारि वेदांतेषु प्रतिष्टिंत ।
तस्यस्वरूपं क्रमशः तावत्तत्र निरूप्यते ॥ १९ ॥

இதன் பொருள் —வேதாந்தத்தில் நான்கு சாதனங்களதிகாரிகளுக்குச் சொல்லியிருக்கின்றது. அவைகளின ஸ்வரூபகிரமத்தை நிரூபிக்கப்படுகின்றது. அவையாவன.—

நித்தியாநித்தியவஸ்து விவேகம் 1. இகாமுததிரார்ததபல போகவிராகம் 2. சமாதிஷட்கசம்பத்தி 3. முமமுக்ஷுத்துவமென நான்கு விதமாகும். இவற்றில நிததியாநித்தியவஸ்து விவேகமென்பது பிரம்மமே நித்தியவஸ்து, ஜகத்தானது அநித்தியவஸ்துவென பகுத்தறிவதாம்.

ஜகத்தானது அநித்தியமென்பது எப்படியென்றால், இவை பூதபவுதிகாத்மமானபடியால் அநித்தியமேயாகும். இன்னமும் பூதபவுதிகங்களுக்கு அநிததியமென்பதையும் நிரூபிககிறோம். யாதெனில், நால்வகை யோனி, ஏழுவகைத்தோற்றம், எண்பத்திநான்குலட்சம பேதங்களாயுள்ள சரீரங்களாம.

அதில் நால்வகை யோனியென்பது, சராயுசம் 1, அண்டசம் 2, சுவேதசம் 3, உற்பீஜம் 4. இதில் பையில கட்டுப்பட்டுப் பிறப்பது சராயுஜம். முட்டையில்க் கட்டுப்பட்டு பிறப்பது அண்டசம. வியாவையில் கட்டுப்பட்டுப் பிறப்பது சுவேதசம். பூமியிடமாய்ப் பிறப்பது உற்பீஜமாம்.

ஏழுவகைத தோற்றமெனபது, தேவர், மானிடர், மிருகம் பக்ஷிகள், ஊர்வனம், நீர்வாழ்வு, தாபரங்களுமாம்.

எண்பத்து நான்கு லக்ஷம பேதமென்பது, தேவர்கள பேதம்-பதினறு லக்ஷமும, மானிட பேதம்-ஒன்பது லக்ஷமும, மிருகபேதம்-பத்துலக்ஷமும, பக்ஷிபேதம்-பத்துலக்ஷமும், ஊர்வன பேதம்-பதினொன்றுலக்ஷமும, நீர்வாழ்வனபேதம்-பத்துலக்ஷமும, தாவரபேதம்-பதினெட்டு லக்ஷமுமாம.

இப்படிக்கு இவைகள் யாவும நசித்துப்போனது சாஸ்திரங்களில கண்டிருக்கிறோமானபடியால், பூதபௌதிகமான ஜகத்தானது அநித்தியமே.

இப்படியே பிரதிவ்யாதி பஞ்சபூதங்களும அநித்தியமே. அது எப்படியென்றால, பிரமமப்பிரளயம வருகிற காலத்தில் 12 சூரியர்களும உதயமாய் 100 வருஷம மழையில்லாமலெரித்து ஜகத்தெல்லாம பஸ்பமபண்ணி பூமியைத் தாங்கிக்கொண்டிருக்கும ஆதிசேஷனுடைய மகுடங்களை பஸ்பமபண்ணுகிற போது சகிக்காமல், அந்த பூதங்களிலிருந்து காலகூடவிஷாக்கினி கிளம்பி இரண்டு அக்கினியுங்கூடி துவாதச ஆதித்தியா முதலான சகலரும் பஸ்பமாகி, அந்தப்புகையினால சப்தமேகங்களுண்டாகி, நூறு வருஷம யானைத்துதிக்கையைப்போல் மழை வருஷித்து, அந்தமழை ஜலத்தால் பூமி பஸ்பவிநயமாகி, அப்போதந்த ஜலம் வாயு ஸதம்பமாயிருக்கும. அப்படி நிறைகின்ற ஜலத்தில் வடவாக்கினிபிறந்து அந்த ஜலமெல்லாம கிரஹிக்கும. பின் அந்த வடவாக்கினியும பிரசண்டவாயுவினுலீனமாகும். அந்த வாயுவும் மகாகாசத்திலீனமாகும். அவ்வாகாசமும அஞ்ஞானத்தாலீனமாகும். அவ்வஞ்ஞானமும பிரஹ்மத்தாலீனமாகும். அப்பிரமமமொன்றே சேஷித்து நிற்கும. இப்படி சேஷித்து நின்ற பிரஹமத்துக்கு வேறே காரணமில்லாதபடியால், பிரஹ்மமே நித்தியமென்று சொன்னது சித்தம்.

இப்படிக்கு நித்தியாநித்திய வஸ்துக்கள் நிச்சயந்தெரிந்தால் அது ஒன்றுமே போதாதோவென்றால், போதாது. ஏன் போதாதென்றால், சில வித்துவான்கள் சாஸ்திரபாண்டித்தியந் தெரிந்துகொண்டு பிரஹ்மமே நித்தியம். ஜகத்து அநித்தியமென்று வாயினால் மாத்திரம் சொல்லிக்கொண்டு ஸ்திரீ புத்திர தன தானியாதி போகபாக்கியங்களிலிச்சையை வைத்துக்கொண்டு

இருக்கிறதினாலே, இரண்டாம் சாதனமான இகாமுத்திரார்த்த பலபோகவிராகமும் தெரியவேண்டியதவசியம்.

அதையும் விவரிக்கிறோம். அதாவது இகலோக வைராக்கியமென்றும், பரலோக வைராக்கியமென்றுமிரண்டு விதமாகும்.

இதில் இகலோக வைராக்கியமென்பது, இகத்திலேயேயிருந்து தனந்தானியமிவைகளைத் தேடவேண்டுமென்று முயலுகிறான். முயன்ற கிருஷிகளில் சிலது லாபமாகிறது. சிலதில் நஷ்டமாகிறது. லாபமானால் சந்தோஷமும், நஷ்டம் வந்தால் துக்கமுமுண்டாகிறது. அதினால் இகலோகவைராக்கியத்துக்கு விக்கினம் வந்துவிடுகிறது.

பரலோகவைராக்கியமாவது யாதெனில்—மேற்சொல்லிய இகலோக சாதனங்களுக்காக முயன்ற கிருஷிகள் நிறைவேறி, தனதானிய கிரக கிராமங்களைச் சம்பாதித்து சந்தோஷமான யக்கிய யாகாதிகளைச் செய்து வருகிறான். அந்த பலத்தினால் சுவர்க்காதி சுகங்களை அனுபவித்து, அந்த புண்ணியங்களுக்குத்தக்க ஜன்மாக்களை மறுபடியும் பெற்று வருகிறான். ஆகையாலிதுவும் போதாது. சமாதிஷட்க சம்பத்தியும் அறியவேண்டியதவசியம்.

சமாதிஷட்கசம்பத்தியாவது யாதெனில்:—

சமம்-தமம்-உபரதி-திதிக்ஷை-சமாதானம்-சிரத்தையென ஆறுவிதமாம்.

இதில் சமமென்பது மனோநிக்கிரகம். தமமென்பது பாக்கிய நிக்கிரகம். உபரதியென்பது யாவும் துறந்த சந்நியாசம். திதிக்ஷையென்பது சுகதுக்கங்கள் வரில் பொறுத்திருப்பது. சமாதானமென்பது, ஷடிந்திரியங்களையும் அதாவது காமக்குரோதாதிகளை அடக்குவது. சிரத்தையென்பது, ஈஸ்வரனிடத்தில் பக்தி விசுவாசம் உண்டாவது

முமுக்ஷுத்துவமென்பது, எப்போது மோக்ஷமடையப்போகிறோமென்று பரபரப்புள்ளது. இவைகளை புருஷனானவன் அடைந்தாலொழிய ஜனனமரணமென்கிற நரகம் விடாது. பந்தமும் போகாது. ஆகையால் எவ்விதத்திலும் மும்முக்ஷுத்துவத்தைப் பெறவேண்டியதவசியம்.

இச்சாதனங்களுள்ளவனெவனோ அவனே பிரஹ்மவிசாரத்திற்கதிகாரியாவன்.

அவ்விசாரமானது, ஜடபதார்த்தமின்னதென்றறிந்து, அதை நீக்கி சத்தையறிகிறதற்கு சத்குரு தரிசனமாயவரிடத்தில மகாவாக்கிய உபதேசம பெற்றுககொணடு, வேதாந்த மகாவாக்கியார்த்தமான ஸாரத்தை விசாரிபபதே விசாரணையாம.

அஃது வேண்டுமெனபதறகு திருஷ்டாந்தம்:—

பசிக்கி அனனம வேண்டுபவனுக்கு சாதனமானது:—இடம், விரகு, பாத்திரம், ஜலம, அரிசி இவைகளுடனே அக்கினியொன்று கூடினால் அரிசியை அன்னமாக பாகமபண்ணி, அதைப்புசிதது பசி நீஙகி எபபடி சுகமாகிறதோ, அப்படியே ஆத்மவிசாரமெனனும பசிக்கி அலலது ஜனனமரணமெனபதை நிவர்த்திக்க, குருவென்கிற யிடததில் வியாபித்து, வேதாநத சாஸ்திரமென்கிற விரகுனால் பிரகாசிதது, மானிட ஜன்மமென்கிற பாததிரத்தில் சாந்தகுணமென்கிற ஜலத்தில் அறிவென்கிற அரிசியை வைராக்கிய மென்கிற அக்கினியால் பாகம்பண்ணி, ஜனனமரணமென்கிற பசியை நிவாத்தித்து, மோக்ஷததை அடைய புருஷனுனவனுக்கவசியமென்று வககில் வைராககியராயர் சொல்லிவிட்டு குந்தினவுடன, மற்றொரு வக்கில விவேகமூர்த்தி ஐயா பேசுகிறது யாதெனில:—

இந்த பிரதிவாதிகளும அவர்கள் தரப்பு வக்கீல்களும் சொல்வதானது, தேகமே மோக்ஷததைக் கொடுபபதா அல்லது தேகமே ஆத்மாவா? அபபடிக்கி இந்த தேகமே ஆதமாதானென்றுசொல்வோமென்றால, அது ஜடமானபடியால ஆதமா ஆகமாட்டாது. அல்லது அவர்கள்சொல்லிவந்த பிராணாதிவாயுக்களை ஆத்மாவோவென்று சொல்லுவோமென்றால், அதுவும் ஜடமாகையால் ஆத்மாவாகமாட்டாது. இநதிரியங்களை ஆதமாதானென்று சொல்லுவோமெனறால், அவை அநதக்கரணததை விஞவ சாமர்த்தியமில்லாதபடியினாலே அதுவும் ஜடமே. அநதக்கரணத்தை ஆத்மாவென்று சொல்லுமேவாமென்றால், அந்த அந்தக்கரணங்களுக்கு ஆதாரமாகிய ஜீவனை அறிய சாமர்த்தியமில்லாதபடியினாலே அதுவும் ஜடமே. ஜீவனையே ஆத்மாவோ

என்று சொல்லுவோமெனறால், ஸர்வாதாரமாய் ஸர்வகாரண மாய் ஸர்வபரிபூரணமாய் ஸர்வசாக்ஷி அதீதவிளக்கமாகிய அகண்டாநந்த நிர்விகல்பப சுத்த சைதன்னிய சுவரூபஸாக்ஷாத் காரன் நீங்கலாக அது ஜீவிக்கமாட்டாதாகையால் அதுவும் ஜடமே.

ஆத்மா எப்படிப்பட்டதென்றால், ஒருபதார்த்தத்தை நினைத்து அதை விட்டு நீங்கி மற்றொரு பதார்த்தத்தை நினையாமல், நடுவில யாதொரு விகாப்பங்களுமில்லாமல், நிர்குணமாத்திரம் யாதொன்றுணடோ அதுவே ஆத்மஞானம். தன்னுடைய சங்கர்ப்விகர்ப்பததினாலே ஜகத்ரூபமாய விளஙகும. ஜகத்தென்று விளங்குகிறதறகு ஞானமிலலாமல் வேறொனறிலலை. அதை விலக்கி ஸவர்காதிபோகங்களைக் கோருகிற பலப்பிராப்தி ஞானிகளுக்கிலலை, பரபிரஹ்மமென்று ஒருவஸது இருக்கிறது. அது எப்படிக் கொத்ததெனறால், எண்ணிறந்த ஆனந்தமாய், ஒரு காலததிலும் அழிவில்லாததாய், நித்தியமாய், ஞான ஸ்வரூபமாய் ஏகமாய், ஸகல வஸ்து ஞானமாயுடைய ஆதம சுவரூபந்தவிர வேறு பேதமில்லாமலிருப்பதால், பால் தயிர் போல பின்னொரு விகாரத்தையுமடையாமல் ஸகல சாமாததியஙகளுமுண்டாய், தன மயமாகிய சைதன்னியமென்னும் ஒரு வஸ்துவுண்டு. அந்த வஸ்துவைத்தவிர பின்பு இப்போதைககாவது இனிமேலாவது காலததிரயத்திலும அன்னியமாய இரண்டாம வஸ்து இல்லவே இல்லை. ரூபமிலலாமல் ஞானமாததிரமாகிய ஆத்மா தன்னைத் தானே சிநதிக்கும. அபபோது ஸ்வரூப ரூபங்களாக விளங்கும. இதறகு சொபபனம் பிரமாணம.

பிரமமம எப்படி நினைக்கிறதோ அநதப்படியாய் ரூபம் விளங்கும். அப்படி விளங்காநின்ற ரூபஙகளெல்லாம் ஞான மாத்திரமாகியது தானே. அநத பதாாததஙகள் சகல சத்துக் களுமுடைததாகியவராகையால், தனனைததானே நினைத்து ரூபமாய் விளங்குகிற வஸதுதானே. இது பதாாத்தமென்று பார்த தால அதற்கு போகஙள அநேகமாயிருக்கும். ஜீவனென்றும், மாயையென்றும், அக்ஞானமெனறும், ஜடமென்றும் இவ்விதமாய்ச சொல்லபபடும். இந்த பேதம் பரமாத்மாவுக்கில்லை, பிரம்மா, விஷ்ணு, மகேசுவரனாலே கறபிககபபட்ட ஜீவராசிகள்

தங்களை வேறொன்றாய் நினைத்துக்கொண்டால் பந்தம் இது ரம்மியவஸ்துவென்று நிர்ணயம் செய்கிற நிச்சயத்தினாலே வாசனையுண்டாகும். அந்த வாசனையோடு கூடிய புண்ணிய கர்மங்களைச்செய்தால் தாமசகுணமாகும். இரண்டும் சமமாய்ச் செய்தால் ராஜஸகுணமாகும். ஞானமாத்திரமே ஸாத்துவிககுணமாகும். ஸாத்விககுண காமத்துக்கு ஸ்வர்காதிபோக சுகமடைந்து படிப்படியாயேறி தன்னைத்தானே அறிவன். ராஜஸகுண கர்மத்துக்கு பலன் மிச்ரமமான சுக் துக்கம் ஜனனம். மரணம் ஜனனம் மரணம் இப்படிக்காகும். தாமஸ குண காமத்துக்கு பலன் நரக வேதனையாகிய துக்கத்தையடையும்.

ஞானமாத்திரம் சத்திய சங்கல்பமுடையதாகையால் தானெப்படி நினைத்தால் அப்படியாகவே விளங்கும். ஆதலால் சுவரூபத்தினாலே உண்டான திருஷ்டாந்திகளாலே கற்பிக்கப்பட்ட ஜீவர்கள் தங்களை சின்மாத்திரமென்றறியாமல் கரணாதி அவயவங்களான தேகம் தானென்றெண்ணிக்கொண்டால், ஜன்மங்களை எடுத்து மரணங்களை அடைந்து சுகதுக்கங்களை அனுபவிப்பார்கள். சுவரூபம் தானே யென்று நிச்சயித்துக்கொண்டால் மோக்ஷத்தை அடைவார்களாகையால், இந்த எதிரி தரப்பு வக்கீல்கள் பேசியது இந்தக் கேசுக்கொத்ததல்ல.

3-வது பாத்திய மறுதாரி சொல்லிக்கொண்டதும் எங்கள் தரப்பு கக்ஷிக்கு விரோதப்பட்டதல்ல. அதை யெடுத்துப் பேசுவது ஒன்றுமில்லையாகையால் கோர்ட்டாரவர்கள் தயவுசெய்து பிராதில்க்கண்ட ஸகல பாத்தியத்தையும் ஸ்தாபித்து எனக்கக்ஷிக்காரனை சுவானந்த சுகானுபவத்தை அனுபவித்துக் கரையேறும்படிக்கும் எதிரிகளை சிக்ஷிக்கவேண்டியதாயுமிருக்கிறது. பிரதம.

இதன்பேரில் கோர்ட்டாரவர்கள் யோஜனைசெய்து மூக்கில் கையை வைத்து சற்றுநேரமிருந்து ஆகாயத்தைப்பார்த்து சட்ட புஸ்தகங்களை பிரட்டிப்பிரட்டி சோதித்துவிட்டு காதில் சொருகிவைத்திருந்த பேனாவை கையிலெடுத்து ஜட்ஜ்மெண்டு எழுதுகிறார்.

ஜட்ஜ்மெண்டு.

இந்த கேஸில் வாதி ஆத்மநாதபண்டிதா, எதிரிகள் இருக்கின்றவுத்தன வகையரு 14 பேர்வழிகள், பாத்திய மனுதாரி அவித்தையென்ற மாயாசக்தி இவர்களுடைய கக்ஷிகளும வாக்குமூலங்களையும, டிஷ தரப்பு சாக்ஷிகள் 1, 2, 3, 4, 6, 7, 8 வரையுள்ள அவர்களுடைய வாக்குமூலங்களையும, வாதி, வாதியினுடைய 1-முதல் 8 சாக்ஷிகளுடைய வாக்குமூலங்களை சோதித்துப்பார்த்து முடிவான நாளது தேதியில் எதிரிதரப்பு வக்கீல்கள் மண்ணாசை உடையார் வகையரு 3 பேர்களும், வாதி தரப்பு வக்கீல் விவேக தீக்ஷதா வகையரு 3 பேர்களும், சொல்லிய கக்ஷிகளின் சாராம்சங்களையுமறிந்துகொண்டு, இதின்பேரில் யோஜித்துப் பார்த்து அதின தாத்பரியங்களை கவனிக்க.

இதில் வாதி தரப்பு ருஜு அம்சங்கள் யாவும் பிரமாணங்களுக்கு ஒத்ததாகவும ஞாயமாகவுமிருக்கிறது. எதிரிகளுடைய ருஜுவாவ அம்சங்கள் யாவும் இந்தக் கேசுக்கொத்ததாகயில்லாமல் ஜடபிரபஞ்ச ஜடதேகாதிகளை வர்ணித்ததுஅது அழியாதவனாதுவைபபோலெண்ணிப் பேசுகிறார்களே யொழிய, நிர்குண-நிரஞ்சன-நிர்விகற்ப - நிசசந்திய - நிரவசன - நிர்ஜல - நிர்விகாரஸ்வரூபமாயும, அக்ஷர-அமல-அப்பிரமேய-அநாசிரய-அனந்த ஸ்வரூபமாயும, அநாதார-அமிர்த-அநாமய-அதவைதாநந்த ஸ்வரூபமாயும, அபாக்கிய-அநகிய--அபாசிய-அநிர்வாச்சிய--அதீந்திரிய-அசூனிய-அபரோக்ஷானந்த ஸ்வரூபமாகியும், இப்படிப்பட்டதன ஸ்வரூபததுடைய வாணநீய நாமங்களுடையவனுக்கு சமமதிவசனம் யாதெனில்,

निर्गुणो निष्क्रियो नित्यो निर्विकल्पो निरंतरं ।
निर्विकारो निराकारो नित्यमुक्तोस्मि निर्मलः ॥ २० ॥

இதன்பொருள்:—சாதுசஙகமஞ்செய்து சற் நருவை சரணாகதியடைநது முடிவு பெறவேணுமாய அர்ததம்.

சாதுசங்க ' எப்படிப்பட்டதென்றால்.:—

இவ்வுலகத்தில தர்மா ர்த்த காம மோக்ஷமென்கிற நான்வித புருஷார்ததம அதற்குள் மோக்ஷமே சிரேஷ்டமானது. புருஷன் அடைய வேண்டிய முக்கிய பிரயோஜனமு அதுவே. யாதெனில், மோக்ஷமானது முக்காலத்திலும் பாதிககபபடாததினாலே தான மறுபடியும பிறபபிலலையென்ற சிததாநத,ததை சுருதியைப் பார்கக. மற்ற மூன்று புருஷார்ததஙகளுக்கும் அததன்மை இல்லையோவென்றால் இல்லைவேயில்லை. அது அனிததியத் தனமையுள்ளவைகள்தான்.

நவைத சித்தாந்தமாவது —

துவைதமென்ற பதததிறகு இரணடென்று அர்ததம். பரமாதமா வேறென்றும ஜீவாதமா வேறெனறும சொல்வது. ஜீவகோடி அனேக பேதமிருப்பதில ஐந்து பேதஙகள் மாததிரம வாஸ்தவமாயும அனாதியாயுமிருக்கிறது. இதில் நித்தியசமசாரிகளெனறும, நிததிய நரகர்களெனறும, முக்தி யோக்கியர்களென்றும், மூவகைப்பட்டவாகள். இந்த ஒவவொரு வகைகளிலும் பல பிரிவுகளுண்டு. அதை விரிக்க வளரும நிற்க. ஜீவர்களுடைய ஸ்வரூபத்திலும, மனுஷிய பசு பக்ஷியாதி பேதங்களுண்டு. முகதி யோககியர்களைத தவிர மறற ஜீவாகளுக்கு முக்தி யென்பதே இல்லை. முக்தி யோககியர்களான ஜீவாகள் தஙகள் தங்களுடைய ஸ்வரூபம் மனுஷிய பசு பக்ஷியாதிகளிலெததுவோ அநதநத ஸ்வரூபத்துடன் முகதியடைகிறாகள். முக்தியில அவரவாகளுடைய உபாசனைக்கிதகக்கபடி ஆநநதத்தில் தாரதம்மியமுண்டு. முக்தி அடைநதவர்களுக்கு மேறகண்ட பஞசபேத ஞான சாதனமானது அதாவது ஜீவேசுவரபேதம், ஜடேசுவரபேதம (ததவமஸி) வாககியததிறகு ஈசுவரனுக்கு ஸமானமான ரூப

ழுடையவனுயிருக்கிறுனென்று அர்த்தம். மற்ற விஷயங்களில் பெரும்பாலும் விசிஷ்டாத்வைத மதத்தை ஒத்தே ஸ்தாபித்திருக்கிறூர்கள். இது மத்துவாசாரியாரவர்களுடைய சித்தாந்தம்.

விசிஷ்டாத்வைதமாவது.—

ஈசுவரன், ஜீவன், ஜடப்பிரபஞ்சம் இவைகள் தனித்தனியாகவும் வாஸ்தவமாயுமிருக்கிறூர்கள். ஈசுவரன் மாத்திரம் ஸர்வக்ஞனுயும், சத்திய சங்கல்பமுள்ளவனுயும், அநந்தகல்யாண குணனுயும், ஜீவ ஜடப்பிரபஞ்சங்களுக்கு அந்தராத்மியாயும், அவர்களுக்கு சரீரியாகவும், ஞானமானுகவும், சேஷியாகவுமிருக்கிறூர். ஜீவர்கள் ஈசுவரனுடைய அம்சமாகவும், அணுக்களாகவுமிருக்கிறூர்கள். அநாதிகாலமென்கிற அவித்தையினுல் தங்களுடைய குணமாறி ஞானங்குறைந்து ஸம்சாரிகளாகவுமிருக்கிறூர்கள். இவர்கள் பகவதாராதனை ரூபமாக செய்யப்பட்ட நித்திய நைமித்திய கருமங்களாலும், பக்தி சிரத்தை வைராக்கியங்களாலும், ஜீவேசுவரனுடைய யதார்த்த ஞானத்தாலும், ஸ்வஸ்வரூபானுசந்தானத்தினுலும், பிரகிருதி சம்பந்தம் நீங்கி, ஸ்வஸ்வரூபமடைகிறூர்கள். இதுதான் கைவல்லியமென்று சொல்லப்படுகின்றது. பிரகிருதி விமுக்த ஆத்மஸ்வரூபமடைந்து இந்த அவஸ்தையில் ஜீவர்களுடைய ஞானகுண விகாசத்தையடைந்து ஸகலத்தையுமறிவார்கள். பிறகு பகவத்தியானுதிகளினுல் வைகுண்டத்தில் பகவானுடைய ஸாந்நித்தியத்துக்கு ஸமமாகிய அப்பிராகிருத திவ்வியமங்கள விக்கிரஹாதிகளாய பகவத ஸன்னதி முதலியவைகளாலுண்டாகும் பரமானந்தத்தை அனுபவிக்கிறூர்கள். இதுதான் முக்தி எனப்படுகிறது. தத்துவமஸி முதலிய அபேத வாக்கியங்களுக்கபேதமென்றுல், ஸூக்ஷ்மசித்-அசித்-விசிஷ்டான சரீரியான ஈசுவரனுக்கும், ஸ்தூலசித்-அசித்-விசிஷ்டனுன சரீரியான ஈசுவரனுக்கும், அபேத அர்த்தமாகையால் விசிஷ்டாத்வைத மதமென்னும் பெயர் வந்தது. இது ராமானுஜாசாரியார் சித்தாந்தம்.

அத்வைத மதமாவது.

ந-துவைதம்-அத்வைதம், இதன பொருள் இரண்டில்லை; எல்லாமொன்றே. ஜீவஜடபிரபஞசம் தோறறமேயனறி வாஸ்தவ மானதல்ல. பிர்மமமானது நிறகுண-நிராகார்மற்ற-ஸசசிதா நநதரூய் எங்கும் நிறைநத பற்றற்ற ஸவயம பிரகாசமாயிருக் கிறது. அநத பிர்ம்மமே ஜீவேசுவர ஜகததாக விளங்குகிறது. அப்படிக்கொற்ற தோறறமானது, அனாதி மாயையினாலுண்டா னது. பரமார்தத நிசையில் இப்படி தோறறப்படும ஸகல பிரபஞ் சங்களும பொயயானாலும பிரகிருத வியவகாரநிசையில ஜீவன், ஈசுவரன், மாயை, இப்படிக்கி பேதமாய் பிரபஞசம் காண்பிவிப் பது வாஸ்தவமே. இவைகளை அனாதியென்று சொல்வானே யென்றால அவைகள ஒரு காலததிலுண்டானவைகளென்று குறிப்பிடத்தககதலலாததனாலேதான.

மாயையினிடத்தில் ஸகலவஸ்துக்களையும தோற்றிவைக்கி றது விக்ஷேபசக்தியென்றும, வஸதுக்களின் சுவபாவத்தைத தோன்றவொட்டாமல் மறைப்பதாகிய ஆவரண சக்தியென்றும, அவித்தையென்றும் சொலவதுண்டு. சைதன்னியம் அதாவது சுதத பிர்மமம், மாயையினுடைய சமமந்ததால் ஜீவனென்று விவரிக்கப்படுகிறது. இரசமமநதமுடைய ஈசுவரன ஸர்வக்ஞன ஆவரண சக்தியானது அவிததியாசமமநதமுடைய ஜீவன கிஞ்சிக் ஞன. அதாவது, அறபஞானி ஆதலால் பெந்தனாயிருக்கிறான். இந்த பெநததிலிருநது நிவாத்தியையடையவேணுமானால் வேதோக்தமான நிததிய நைமிததிய காமங்களை ஈசுவரார்ப்பண மாகச செய்துவநதும பகவதபக்தி செய்தும, சிததசுத்தியை அடைந்து ஸர்வகுருவினால் உபதேசிககபபடும், ததுவமஸிமுத லிய மகாவாககியார்ததமாகிய ஜீவேசுவரபேததை சிரவணஞ் செய்து, அடிக்கடி சிநதிபபதாகிய நிததியாசத்தையும மனதை இடாவிடாமல் சிநதையுடன அனுஷ்ட்டிககவேண்டும். அப்படிச் செய்துவந்தால் பிரததியக்ஷமாயுண்டாகும் அகம்பிரம்மாஸ்மி